
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43] இரக்தாக்ஷி ஆண்டு வைகாசித் திங்கள் 10—6—84 [இதழ் 7

## தருமையாதீனத்தில் அனைத்துலக சைவசித்தாந்த முதற் கருத்தரங்கம்



வே... ஆகம புராண

இதி...சத் திருமு...

...தாந்த சாத்திர

...ட்டுச்சுவடிகள்

ஆறு யானைகள் மீது

ஊர்வலமாக

எழுந்தருளித்

திருக்கயிலாய

நினைவுச்சின்னம்

நுழைவாயிலில்

புகுதரும் காட்சி

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்


உ

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43 || 10–6–84 || இதழ் 7


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | பிரார்த்தனை செய்வோம் | 305 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... | 310 |
| 3 | கடிதம் ... | 315 |
| 4 | தருமையாதீனத்தில் அனைத்துலக சைவ சித்தாந்த முதல் கருத்தரங்கப் பெரு ... விழா | 316 |
| 5 | 'குருவினை வணங்கிக் கூப்புவேன் என்கரம்' | 321 |
| 6 | அபிராமி அந்தாதி ... | 324 |
| 7 | திருவருட்பாத் திரட்டு | 329 |
| 8 | கேதாரம் நோக்கி! ... | 333 |
| 9 | திருநாளைப்போவார் ... | 337 |
| 10 | செய்திகள் ... | 343 |
| 11 | எதிர்காலம் ... | 348 |


உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளுவாககு

பொய்யாம் மல்மறுத் தென்
பூரணத்தை [வளத் தானந்த
மெய்யா அளித்[illegible] விடாதிகண்
லோகெடுவேன் [[illegible]ய்விடி
ஐயா! எனதுயி ரேவினை
தழுந்தியென்றும் [மார்க்கத்
நையா தருள்செய்; மதுரா
நாயகனே. [புரிச்சொக்க

—சொக்கநாதக் கலித்துறை 8


ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி அருணைவடிவேல்முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12 ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 35 ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 350

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 43 | இரக்தாக்ஷி - வைகாசி– 10—6—84 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## பிரார்த்தனை செய்வோம்!

**தமிழர் பண்பாடு :**

தமிழனின் பேருள்ளம் தனிச்சிறப்பு வாய்ந்தது. தமிழன் இவ்வுலகம் முழுவதையும் தன் ஊராகவே பார்த்தான் – உலக மக்கள் அனைவரையும் உற்றாராக, உறவினராக மதித்தான். தீமையும் நன்மையும் பிறர் கொடுக்க வருவதில்லை – நமக்கு நாமே தேடிக்கொள்வது என்ற நல்உணர்வைக் கொண்டான்.

“ யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
தீதும் நன்றும் பிறர்தர வாரா! ”

என ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஆன்மீக ஒருமைப் பாட்டு உணர்வை அகிலத்திற்கும் ஓதினான். ‘ மக்கள் யாவரும் ஒரேகுலம் – மக்கள் அனைவருக்கும் ஒருவனே இறைவன் ’ என்று திருமூலர் திருவாய் மலர்ந்து அருளினார். “ ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் ” என்பது அவரது

திருமந்திர உபதேசமாகும். நமது தாயுமானவ அடிகளார் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!" என வாழ்வாங்கு வாழ ஒப்பற்றதோர் வழியை வகுத்து வையத்து மாந்தருக்குப் போதித்தார். சைவப்பெருமக்கள் தமது வழிபாட்டில் தாம் மட்டும் வாழவேண்டும் என்று இறைவனிடம் இறைஞ்சுவது இல்லை. எல்லா உயிர்களும் குறைவிலாது வாழவேண்டும் என்றே இறைவனை வழுத்தினர். "குறைவிலாது உயிர்கள் வாழ்க!" என்றே கோரி வழிபட்டுவந்தனர். இஃது ஈடற்ற தமிழ் உள்ளத்தின் ஏற்றமிகு இயல்பாகும்.

**தாய் நாட்டுக்குழப்பம் :**

இன்று நம் பாரத தேசம் செல்லும் பாதையைப் பாருங்கள். 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்று நெகிழ்ந்துருகத்தான் செய்கிறது. பஞ்சாப் பகுதி படுகளமாக மாறிவிட்டது. சீக்கிய மதத்தினர் ஆக்கிவரும் தொல்லை அளவில் அடங்காதது. அங்கே இன்று இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு விட்டது. அஸ்ஸாமைப் பாருங்கள். இந்திய அரசுக்கு அஸ்ஸாம் கொடுத்துவரும் தொல்லையும் துன்பமும் செப்ப ஒண்ணாதது. பம்பாய் மாநிலத்தைப் பாருங்கள். சிவசேனை இயக்கத்தார் பட்டப் பகலிலே, அங்குவாழும்மற்றமாநிலத்தவர் மேல் முற்றுகை செய்கின்றனர். எங்கணும் இனவெறி! எங்கணும் மொழிவெறி! எங்கணும் மாநில வெறி தாண்டவமாடுகிறது. காந்தியடிகள் "கத்தியின்றி இரத்தமின்றிப்" போராடி, ஆன்ம பலத்தால் ஆங்கிலேயரைப் பணியவைத்து இந்நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார். சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது தான் – ஆனால் பொருளாதார விடுதலையை அடைந்தோமில்லை. பண வீக்கம், விலைவாசி ஏற்றம், பஞ்சம், பற்றாக்குறை, லஞ்ச ஊழல், உட்பகை – இவற்றைக் கடந்து நல்வாழ்வைக் காணப் பெற்றோமா ? இல்லை என்று தானே கூறவேண்டும்.

**சேய் நாட்டுக்குழப்பம் :**

இலங்கைப் பிரச்சனை நம்மைக் கலங்கவைக்கும் பிரச்சனை. பாரதப் முயன்று பல்லாண்டுக் காலமாகத் தீர்க்கப்படாத-தீராத பிரச்சனை. இலங்கைவாழ் தமிழ்மக்கள் முயற்சியால் அந்நாடு வளர்ந்து தழைத்தது. ஆனால் இன்று? இனவெறி எங்கணும் தமிழருக்கு இன்னல் தருகிறது. கொலை, கொள்ளை, அராஜகம் இவற்றிற்குத் தமிழ்க்குடிமக்கள் ஆளாகி உள்ளார்கள். அகிம்சை வழி வாழ வேண்டிய புத்த மதத்தினரும் அநீதி வழி

யில் அல்லல் விளைக்கின்றார்கள். அங்கு வாழும் தமிழ் மக்கள் தனி ஈழம் கேட்கும் அளவுக்குப் பிரச்சனை முற்றிவிட்டது. தமிழர்களை அந்நாட்டிலிருந்து துரத்தியடிக்க வேண்டும் என்று சிங்களவர் கங்கணம் கட்டிக்கொண்டு போராடுகிறார்கள். இதற்கு இலங்கையரசும் மறைமுகமாக இணைந்து போகிறது. என்ன கொடுமை! வடஎல்லையிலே பாகிஸ்தான் தொல்லை நம் பாரதத்திற்குப் பெருகிவருகிறது. எந்த நிமிடமும் பாகிஸ்தானுல் பாரதத்திற்கு ஆபத்து என்று நம் மத்திய அரசு அறிவித்த வண்ணம் இருக்கிறது. சீனநாட்டவரும் இந்தியாவின்பால் பகையுணர்ச்சியை இன்னும் விட்டபாடில்லை.

## அனைத்துலகக் குழப்பம் :

ஏகாதிபத்தியம் (Imperialism), தேசியம் (Nationalism), சர்வதேசியம் (Internationalism) - இன்று நவயுக அரசியலில் இவை மூன்றும் பெரிய சக்திகள், மேற்கத்திய ஏகாதிபத்திய வாதிகளை மெல்ல மெல்ல சரித்திரம் விரட்டிவிட்டது. கதிரவனே அஸ்தமனமாகாத சாம்ராஜ்யம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்று ஒரு காலத்தில் வெள்ளையன் விருப்புப் பேசிக் கொண்டிருந்தான். சாம்ராஜ்யம் நிறுவி ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இன்று சரிந்துவிட்டது - சரித்திர முக்கியத் தத்துவத்தையும் இழந்துவிட்டது. அடுத்து, தனது நாடு, தனது மக்கள், தனது ஆதிக்கம், என்று தங்கள் முக்கியத்துவத்தைத் தலைதூக்கி நிற்க வைப்பது தேசியமாகும். இன்று அமெரிக்காவிற்கும் ரஷ்யாவுக்கும் தத்தம் நாட்டின் முக்கியத்துவத்தை நிலைநாட்டுவதிலே போட்டி. சர்வதேசியம் என்பது சகவாழ்வை வற்புறுத்தும் கோட்பாடு. எல்லா நாடுகளும் நலமுறவாழ வேண்டும்; வலியநாடுகள் எளியநாடுகளுக்கு உதவவேண்டும் இது சர்வ தேசியத்தின் இலட்சியம். இந்த உணர்வால் தான் ஐக்கிய நாடுகள் சபை உருவாயிற்று. முற்போக்கை நாடும் முக்கிய நாடுகள் யாவும் ஐக்கிய நாடுகள் சபையிலே உறுப்பு நாடுகள்.

ஆனுல் ஐக்கிய நாடுகள் சபை ஐக்கியத்தோடு இயங்கவில்லையே. முக்கிய வல்லரசுகட்கு உள்ள விசேட அதிகாரத்தால் தக்க முறையில் இச்சபை செயற்படவில்லை. அமெரிக்காவும் ரஷியாவும் உலக நாடுகளை இரண்டாகப் பிரித்துக் கொண்டு கூட்டுச் சேர்த்துக்கொண்டனர். இது சமாதானத்திற்குக்கு நாசம் விளைவிப்பதாகும். இதனை உணர்ந்து பண்டிதநேரு அவர்கள் கூட்டுச்சேரா நாடுகளை ஒருங்கிணைத்து மூன்றாவது வல்லரசாக ஒரு நிறுவனத்தை அமைத்தார். இந்திரா காந்தியும் இதைத் தொடர்ந்து இயக்கி வருகிறார்.

## ஆன்மீகத்தில் அழுத்தம் தேவை :

உலகு எங்கணும் இந்த நிலை—பதட்டநிலை நிலவக் காரணம் என்ன? சுமார் 120கோடி மக்கள் கிறித்தவ மதத்தைப் பின்பற்று கின்றனர், 60 கோடி மக்கள் இந்து சமயத்தைத் தழுவி நிற்கின் றனர். இஸ்லாம் மதத்தைச்சார்ந்தவரும் சுமார் 60 கோடி மக்கள் உள்ளனர். 10 கோடி மக்கள் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள். எல்லாச் சமயங்களும் தெய்வ நெறிக்கு வழிகாட்டுவனவே! எல்லா மதங்களும் சன்மார்க்கத்திற்கும் சாந்திக்கும் வழிகாட்டு வனவே, என்றாலும் உலகில் அமைதி இன்மைக்குக் காரணம் என்ன? அழுத்தமான ஆன்மீக நெறியை மக்கள் தழுவி வாழா மையே இதற்குக் காரணமாகும்.

பிரார்த்தனை, வாயு மண்டலத்தில் புகுகின்ற அழுக்கான எண்ண அலைகளை ( Vibrations ) ஊடுருவித் தூய்மை செய்ய வல்லது. இது மெய்ஞ்ஞானிகள் அனுபவத்தால் அறிந்த உண்மை. விஞ்ஞானமும் இதற்குச் சான்று பகர்கிறது.

மகரிஷி மகேஷ்யோகி என்பார்" ஆழ்நிலைதியானம் "(Transcendental Meditation) என்றதொரு தியானமுறையை உலகம் எங்கணும் பரப்பி வருகிறார். அவர் ஓர் அரிய கருத்தை இயம்பு கிறார். "ஓர் ஊரில் மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம் பேர்கள் ஆழ்நிலை தியானத்தைச் செய்து வந்தால் அந்த மக்கள் தொகை யில் 18 சதவிகிதம் மக்களிடையே குற்றம் புரியும் மனோநிலை குறைந்து விடும்" என்று புள்ளி விவரம் தருகிறார். பிரார்த்தனை மூலமாகத் தீயசக்திகளைக் குறைத்துத்தூயசக்தியை உண்டாக்க லாம் என்பது உறுதி.

## ஞானசம்பந்தர் உபதேசம் :

உலக சமாதானம், உலக சுபிட்சம் என்பது உலக மக்கள் அனைவருக்கும் பொதுப்படையான கோரிக்கையாகும். நல்லவை எல்லாம் சான்றோர்க்குக் கடமையே என்றார் திருவள்ளுவர்.

> "கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
> சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

நமது குருமகாசந்நிதானம் அவர்கள் உலக நலம் கருதிப் பெருங்கருணை பாலித்துப் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்று உலக அமைதிக்குப் பிரார்த்தனைவழி அவசியம் என்று வற்புறுத்தி வருகிறார்கள். சைவசமயம் என்பதை மட்டும் கருதாமல்—பொது வாக இந்து சமய முன்னேற்றம் கருதி விஸ்வ இந்து பரிஷத் போன்றோர் நடத்தும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்துக் கருணை பாலிக்கிறார்கள். இது நமக்கெல்லாம் ஒருமை பாட்டுணர்வைத் தட்டி எழுப்புவதாயுள்ளது.

நமது சமயாசாரியருள் முதல்வராகிய திருஞானசம்பந்த சுவாமிகள் ஓர் அற்புதக் கருத்தை வெளியிடுகிறார்கள். தீமைகளைப் போக்க வேண்டுமானால், – வையகத்தில் துயரமெல்லாம் நீங்கவேண்டுமானால், ஆண்டவன் நாமத்தினை – அரன் நாமத்தினை உலகு எங்கணும் சூழச்செய்ய வேண்டும் – பரவச்செய்ய வேண்டும் – உலவச் செய்யவேண்டும்.

" ஆழ்க தீயது,எல் லாம் அரன் நாமமே
சூழ்க, வையகமும் துயர் தீர்கவே "

வையகம் எங்கணும் அரன் நாமம் – ஆண்டவனது திருநாமம் சூழ வேண்டுமாயின், வையக மாந்தர் அழுத்தமான ஆன்மீக நெறியை மேற்கொள்ள வேண்டும். கூட்டுவழிபாடு போன்ற சாதனங்களைக் கையாளவேண்டும். தீயது ஆழவும், வையகம் துயர் தீரவும் ஒரே வழி – ஒப்பற்ற வழி – அருநெறிய மனம் வைத்து நமக்காக உலகத்திற்காகப் பிரார்த்தனை செய்வதுதான் உய்விற்கும், அமைதிக்கும் ஒரே வழியாகும்.

**நமது பிரார்த்தனை :**

இனவெறி, மதவெறி, மொழிவெறி, சாதிவெறி, தேசியவெறி முதலியன நீங்க நாம் பெருமானை எண்ணிப் பிரார்த்தனை செய்வோம் !

வேறுபாடுகளும், மாறுபாடுகளும் தீர்ந்து மாந்தர் உள்ளங்களில் சகோதர பாவமும், சாந்தியும் நிலவப் பரம்பொருளைத் துதித்துப் பிரார்த்தனை செய்வோம் !

காலம் வழுவாது வான் மழை பெய்து உழவு செழிக்கவும் தொழில்கள் எல்லாம் பெருகிச் சுபிட்சம் எய்தவும் உலகில் வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஓங்கி உயர் வாழ்வு எய்த ஈசனை வேண்டிப் பிரார்த்தனை செய்வோம்.

எங்கணும் இறை நெறி ஓங்கவும் உலகில் அமைதி நிலவ ஆலயங்கள் தோறும் பூசனைகள் முட்டின்றி நிகழவும் அரன் கழல் வழுத்திப் பிரார்த்தனை செய்வோம்.

சீத மழை முகில் பொழிக! தேசமெலாம்
பயிர் விளைக! செல்வம் ஓங்க!
மாதர் குழாம் மக்கள் குழாம் மனையறங்கள்
உடன் பொலிந்து மலிந்து வாழ்க!
மேதகு சீர் சைவநெறி வேதநெறி
தழைத் தோங்க! மேலும் மேலும்
பூதலமேல் சிவபெருமான் ஆலயங்கள்
பூசனைகள் பொலிக மாதோ!

— திரிகூடராசப்பக் கவிராயர்.

**சஞ்சலம் தீர்க! சாந்தி நிலவுக!**

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற

**ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவில்**

வழங்கியருளிய

# ஆசியுரை

25—4—84

" கூற்றாயின வாறுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே "

**அப்பர் குருபூஜை :**

இன்றும் நாளையும் அப்பர்பெருமான் இறைவன் திருவடி அடைந்த நாளை நினைத்துக் கொண்டாடப்பெறும் புனிதமான குருபூஜைத் திருநாட்களாகும். இன்று மதியம் 1 மணிக்கு சதயம் வருகின்றது. இரவு சதய விண்மீன் இருப்பதனால் அப்பர்பெருமான் ஐக்கியமான திருப்புகலூரில் இன்று ஐக்கிய தினம் கொண்டாடப் பெறுகின்றது. திருவாமூர் அப்பரடிகள் அவதாரத் தலமாதலால் ஐக்கியத்திற்கு முக்கியத்தும் கொடுக்காமல் மீதியாக வரும் நாளை-குருபூஜை நாளாகக் கொண்டாடுகின்றோம். அப்பர் பெருமான் விழா நாடெங்கும் பல இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. பெறினும் சிறப்பாக அவதாரத்தலமாகிய திருவாமூரில்பல ஆண்டுகளாகக்

கொண்டாடப்பெற்றுவருகிறது. தருமையில் அப்பர் குருபூஜை விழாவை வழக்கம்போல் சிறப்பாக இன்று கொண்டாடுகின்றோம்.

**நாட்டாரின் நல்லொழுக்கம் :**

நம் சமயாசாரியர்களின் திருநாட்களை அனைவரும் அவசியம் மறவாமல் கொண்டாடுதல் இன்றியமையாததாகும். சைவராக இருக்கும் ஒவ்வொருவருக்கும் இது கடமையாகும். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று ஈண்டு நினைவிற்கு வருகிறது. அவர் 18—8—1884 ல் பிறந்தவர். கரந்தைப் புலவர்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி நூற்றுக்கு மேற்பட்ட புலவர்களை உருவாக்கியவர். அவரின் நாவன்மையைப் பாராட்டி 'நாவலர்' எனனும்பட்டம் அளிக்க ஏற்பாடு செய்தனர். நாட்டார், நாவலர் என்ற பெயரைத் தன் பின்னல் போட்டுக்கொள்ள விரும்பவில்லை. ஆறுமுக நாவலர் ஒருவர் தான் அவ்வாறு போட்டுக்கொள்ளலாம் என்று கூறி, தன் பெயருக்கு முன்னல் ' நாவலர் ' என்னும் பட்டத்தைப் போட்டுக்கொள்ளச் சம்மதித்தார். அவரின் அடக்கத்தையும் பெரியோர்கள் பால் அவர் காட்டும் பக்தியையும் இது காட்டுகிறது.

நாட்டார் அவர்கள் வயோதிகம் அடைந்து உடல் நலிவுற்று இருந்தார்கள். கல்லூரியில் நால்வர் பெருமக்கள் விழாவினைச் சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். அவ்விழாவில் சிறந்த அறிஞர்களை அழைத்துப் பேசச் செய்வார். ஒருமுறை நாட்டார் அவர்கள் உடல்நலக்குறைவுகாரணமாகச் சுந்தரர் திருநாளை மறந்துவிட்டார். காலை 10-00 மணிக்குத் தற்செயலாகக் காலண்டரைப் பார்த்தார். அன்று ஆடிச்சுவாதி சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைத் திருநாள்! ஆகா ! நாம் சைவராக இருந்தும் சுந்தரர் திருநாளை மறந்துவிட்டோமே ! என்று வருந்தி, உடன் கல்லூரிக்கு ஆள் அனுப்பி, "இன்று சுந்தரர் குருபூஜை நாள் ! ; மாலை கூட்டம் நிகழ்வுறும்" என்று அறிக்கை விடச்செய்து, உடல் நலிவாக இருந்தபோதிலும், மாலையில் கல்லூரி சென்று விழாவை நடத்திவந்தார். விழாவில் அவர் பேசியபோது சைவராக இருந்தும் காலண்டர் கொண்டு சுந்தரர் நாளை அறியும் சூழலுக்கு வந்துவிட்டோமே! என்றார். அதற்குமேல் பேச முடியாமல் விம்மினர், நைந்து கண்ணீர் உகுத்தார். இந்நிகழ்ச்சியை அவரிடம் பாடம் பயின்ற திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் ஒருமுறை சுந்தரர் குருபூசை விழாவில் கூறினர்.

**கடமையும் உரிமையும் :**

ஆசாரியர்களை மறக்கலாமா? தன்னை அறிவித்துத் தான் தானாகச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழையல்லவா? நம்மை அறிவித்து உயர்த்துபவர் யாவர்? செம்பைப் பொன்னாக்குவது போல நம்மை உயர்த்துபவர்கள்; நம்மை இறைவனோடு சேர்க்கக்கூடிய பெருமை பெற்றவர்கள் நால்வர் பெருமக்கள்தாமே! இவர்கள் விழாவினை நாடெங்கிலும் எல்லோரும் கொண்டாடுதல் வேண்டும்.

நம் நாடு மதச்சார்பற்ற அரசைக்கொண்டுள்ளது. இவ் அரசின் அரிய சாதனங்களில் ஒன்று வானொலி. இவ்வானொலியில் இசுலாம் பெருவிழாபற்றியும், கிறித்துவ சமயச் சிறப்பு நாட்கள் பற்றியும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றார்கள். இதேபோன்று, அப்பரடிகள் போன்ற சமயாசாரியர்கள் திருநாட்களன்றும் சைவ சமய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவது அவசியமும் நடுநிலை உணர்வும் ஆகும் அல்லவா? இதனை அதற்குரியோர் ஆழச்சிந்தித்துச் செயல்படுவார்கள் என்று நம்புவோமாக.

**கூற்று — விளக்கம் :**

இனி, இன்றைய திருநாளுக்குரிய அடிகளின் வாழ்வையும் வாக்கையும் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

அடிகள் அருளிய பாசுரங்கள் தேவாரமாக மிளிர்கின்றது. அவர் அருளிய முதற்பாடல் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்கும் பாடலாகும். இப்பாடலில் 'கூற்று' என்னும் சொல் தரும் பொருள் குறித்துச் சிந்தித்தல் அவசியம். பலரும் இதற்கு 'எமன்' என்றே பொருள் கூறி வருகின்றனர். 'கூற்று' என்பதற்குச் 'சொல்' என்னும் பொருளும் உண்டு. அக இலக்கிய, இலக்கணங்களில் 'தலைவிகூற்று', 'தலைவன் கூற்று' என்று வருவதனைக் காணலாம். கூறுதல் என்பதும் காண்க.

அப்பர்பெருமான் முன்னைய பிறவியில் வாகீச முனிவராகத் திருக்கயிலாயமலையில் தவம் செய்து வாழ்ந்துவந்தவர். மிகுந்த அருள் உள்ளம் கொண்டவர்கள். இவர்கள் கயிலாயமலையில் வாழ்ந்து வரும்காலத்து இராவணன் கயிலைக்கு வருகின்றான். கயிலாயமலையைப் பெயர்க்க முற்படுகின்றான். மலை சிறிதே அசைகின்றது. தேவியார் அஞ்சி இறைவனைப்பற்றுகின்றார். பரம்பொருள் தன் காற் பெருவிரலால் சிறிதே ஊன்றிய நளுகின்றார். இராவணன் எலும்பெல்லாம் நொறுங்க மலைக்கீழ்

அகப்பட்டு அலறுகின்றன். 'இராவணன்' என்ற சொல்லுக்கு அழுகிறவன் என்பது பொருள் அவன் அலறலை ஆங்கிருந்த வாகீசமுனிவர் கேட்டுக் கழிவிரக்கம் கொள்கின்றார். ஆபத்தினை உணர்ந்து அவனுக்கு உதவ முன்வருகின்றார். பரமேசுவரரின் தண்டனை என்பதனையும் மறந்து, இறைவன், 'சாமகானப் பிரியன்' என்பதை உணர்த்துகின்றார். இராவணன் புத்திசாலி! தன் கையில் வீணையை உருவாக்கி 'சாமகானம்' மீட்டினன். சுவாமி மிகுதியும் கருணாமூர்த்தி அல்லவா? அவன் குற்றத்தைமறந்தார். கருணைபாலித்தார். அவரை 'ஆசுதோஷி' என்பர். தவறு செய்தவன் அதனை உணர்ந்துவருந்தினால் பரம்பொருளின் கருணை அவனை ஏற்கும்! இதைத்தான் அபிராமி பட்டர்,

"வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரைப்
பொறுக்கும் தகைமை புதியதன்றே"

என்று அருளுகின்றார்.

இராவணன், இறைவன் 'சாமகானப் பிரியன்' என்பது உணர்ந்து சாமகானம் மீட்டியதும் அவனுக்கு வாழ்நாள் மட்டுமா தந்தார்? நாளும் வாளும் தந்தார். முக்கோடி வாழ்நாளும் சந்திரகாசம் என்ற வாளும் வழங்கியருளினர்.

இங்ஙனம் இறைவன் அருளை வழங்குவதற்கு அப்பாடிகள் கூறிய ஒரு சொல் தானேகாரணமாயிற்று. அதாவது "சாமகானப் பிரியர்" என்று கூறியதுதானே! தகுதியில்லா இராவணன் இசை மீட்டி அருளைப் பெற்றதற்கு – அவனுக்குத் துணையாய் இருந்தவர் வாகீசமுனிவர் ஆதலின் அவர் மண்ணுலகில் பிறந்து வாழவேண்டிய நிலைக்கு ஆளாகிறார். ஆகவே தாம் முற்பிறவியில் கூறிய ஒரு 'சொல்' தான் – ஒரு 'கூற்று' தான் இந்நிலைக்குக் காரணமாயிற்று என்பதனைத் திருவருளால் உணர்ந்த அப்பர் சுவாமிகள் தாம் அருளிய முதல் பாசுரத்தில் "கூற்று-ஆயினவாறு விலக்ககிலீர்" என்று அருளுகின்றார்.

**நன்மையிலும் தீமை :**

எனவே உதவுவதில் தவறேயில்லை ஆனால் யாருக்கு உதவுகின்றோம் என்பதைப்பொறுத்து அது பலன்தருகிறது அதனால் தான் உலகோரும் "பாத்திரம் அறிந்து பிச்சை இடு" என்றனர். வள்ளுவரும் இதனால் தான்,

"நன்றாற் றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை"

என்று அருளுகின்றார்.

இத்தகைய நல்ல சிந்தனைகளை, நற்றமிழ்ப்பாசுரங்களை இது போன்ற நாட்களில் சிந்தித்தலும், திருமுறைப் பாடல்களை முற்றோதலும், வரலாற்றைப் படித்துணர்ந்து கடைப்பிடித்தலும் அனைவரும் மேற்கொள்ளுதல் அவசியமாகும். வைணவர்கள் இராப்பத்து, பகல்பத்து என்று வைத்து பிரபந்தங்களை ஓதுகின்றனர். சைவர்களும் குருபூசை தினத்திலாவது அருளாளர்களின் வாக்குகளை முற்றோதல் நல்லது.

## பட்டம் பெறுவோர் :

இந்த நல்ல நாளில் திருமுறைப் பணியினைத் தொடர்ந்து ஈடுபாட்டுடன் செய்து வரும் ஓதுவாமூர்த்தி ஒருவர்க்குத் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிப்பதை நமது ஆதீனம் பல்லாண்டுகளாச் செய்துவருகிறது. இவ்வாண்டு அவ்வகையில் திருவாரூரில் ஸ்ரீ தியாகராசர் சந்நிதியில் திருமுறைப்பணியினைத் தொடர்ந்து செய்துவரும் ஓதுவாமூர்த்தி திரு. ச. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கட்கு இப்பட்டம் பொறித்த பொற்பதக்கமும், வெண்பொற்கிழியும் வழங்கப் பெறுகின்றன. இவர் திரு. நடராச தேசிகர் அவர்களிடம் பயின்றவர். திருவாமூரில் அப்பரடிகள் குருபூசைப் பெருவிழாவில் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டத்தை முதல் முதல் திரு. நடராசதேசிகர் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. அவரின் மாணவர் இன்று இங்குப் பட்டம் பெறுகிறார். இதுவும் இறையருளே!

## தொழிலைப் போற்றுக :

இங்கு, இந்த நேரத்தில் ஒரு செய்தியை வலியுறுத்துதல் அவசியம் பலரும் தங்கள் தங்கள் தொழிலை இழிவாகக் கருதி வருகின்றனர். அதைத் தம் வாரிசுகள் பின்பற்றுதல் கூடாது என்றும் கூறிவருகின்றனர். இந்நிலை திருமுறைவாணர்களிடமும் இருக்கிறது. இது தவறு. பாரதியார் கூறியது போன்று "செய்யும் தொழிலே தெய்வம்; அதில் திறமை தான் நம் செல்வம்" என்று எண்ணி வாழ்தல் நல்லது. எந்தத் தொழிலும் இழிவு இல்லை. தோட்டியிலிருந்து தொண்டைமான் வரையில் அவரவர்கள் செய்யும் தொழிலைக் காட்டிலும் உயர்ந்த தொன்றில்லை என்று பெருமிதமாக எண்ண வேண்டும். அதில் அவர்கள் காட்டும் திறமையாலும் உண்மை உழைப்பாலும் தான் உயர்கின்றனர். இது வரலாறு காட்டும் உண்மை. நாயன்மார்களில் எல்லாத் தொழிலைக் கொண்டோரும் உள்ளனர். நாம் அவர்களிடையே வேறுபாட்டைக் காண்கின்றோமா?

இல்லையே! ஏன்? அவர்கள் அனைவரும் செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதி வாழ்ந்தவர்கள். எனவே எல்லோரும் தாம் தாம் செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதி உண்மை உணர்வோடு செயற்பட்டால் வளர்ச்சி என்பது தானே வரும். இதில் ஐயம் இல்லை. இதையும் இந்த நாளில்–உழைப்பால்–உன்னதத் தொண்டால் உயர்ந்த அப்பர்பெருமான் திருநாளில் அனைவரும் சிந்தித்துச் செயல்படுவார்களாக!

**வாழ்த்து :**

இவ்விழா நலமுற நிகழவும் இது போன்ற விழாக்கள் நாடெங்கிலும் நடைபெற்று அன்பர்கள் இம்மை மறுமை வீடுபேறும் பெற்றுச் சிறக்கவும், இன்று பட்டம் பெறும் திருமுறைக்கலாநிதி திரு. ச. கல்யாணசுந்தர தேசிகர் எல்லா நலன்களும் பெற்றுத் திருமுறைப்பணியினைத் தொடர்ந்து செய்து சிறக்கவும் எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சைவப் பணி!
வளர்க தொண்டர் கூட்டம்

---

**கடிதம் :**

பேராசிரியர்
**சொ. அரியநாயகம்** எம். ஏ.,
(கவிஞர் காராளன்)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
வித்யாலயக் கலைக் கல்லூரி,
கோயமுத்தூர்.

## குருபூஜைத் திருநாள்

குருவருளை நல்வினையால் கூடப் பெற்றேன்
குருபூஜைத் திருக்கோலம் காணப்பெற்றேன்
குருவருளின் மலர்விழியால் ஆசி பெற்றேன்
குருவருளால் நெகிழ்ந்துமனம் உருகப் பெற்றேன்
குருவருளால் திருநீறு பூசப் பெற்றேன்
குருவருளால் என்னையேநான் மறக்கப் பெற்றேன்
குருவருளால் சொல்லரிய உணர்வு பெற்றேன்
குவலயத்தில் அடியவன்போல் யார்பெற் றாரே!

தருமையாதீனத்தில்

# அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கப் பெருவிழா

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

உலக சமயதத்துவங்கள் பலவற்றையும் தன்னுட்கொண்டு அவற்றின் மேம்பட்டதாய் விளங்கும் சைவ சித்தாந்த சமய தத்துவங்களைப் பிற சமய தத்துவங்களோடு ஒப்புநோக்கி ஆய்வுசெய்து அதனை உலகெங்கும் பரவச்செய்ய வேண்டுமென்ற பெருநோக்கில் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தருமையில் உலகளாவிய சைவ சித்தாந்த ஆய்வு மையம் ஒன்றைத் தொடங்கியருள வேண்டுமென்று திருவுளம் பற்றினார்கள். தமிழக அமைச்சர்கள் நீதித்துறையைச்சேர்ந்தவர்களோடும் சைவ சித்தாந்தத்தத்துவ ஆய்வாளர்களோடும் சிந்தித்துஇவ்வாய்வுமையத்தைத் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைந்து தருமையில் நடத்துவதெனத் தீர்மானித்தார்கள்.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. P. S. மணிசுந்தரம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளத்தை அறிந்து இச்சீரிய நோக்கம் நிறைவேறத் தம்மால் இயன்றதனைத்தையும் செய்வதாக உறுதியளித்ததோடு ஆய்வுமையம் தொடங்குவதற்குமுன் உலகளாவிய கருத்தரங்கம் ஒன்றைத் தருமையில் நடத்தி அதன் நிறைவு நாளில் ஆய்வு மையத்தைத் தொடங்குவது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் பெரிதும் மகிழ்ந்து அவ்வாறே செய்யலாம் என உடன்பட்டருளினார்கள்.

தருமை ஆதீனமும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகமும் இணைந்து அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கைத் தருமையில் நடத்துவது என்ற கருத்து உருவாயிற்று. டாக்டர் திரு. வ. தேவசேனபதி, டாக்டர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, டாக்டர் திரு. ஆர். கோலப்பிள்ளை, திரு. சி. அருணைவடிவேல் முதலியார் திரு. என். ஆர் முருகவேள் ஆகியோர்கொண்ட ஆலோசனைக்குழு அமைக்கப்பெற்றது.

பல்கலைக் கழகச் சார்பில் பேராசிரியர், டாக்டர், திரு. கே. செல்லப்பன் அவர்களும், ஆதீனச்சார்பில் திரு. டி. என். அருணாசலம் பி. ஏ., பி. எல். அவர்களும், செயலர்களாக நியமிக்கப்பெற்றார்கள். அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பத்திரிகைகளிலும் வானொலி முதலியவற்றிலும் கருத்தரங்க விவரங்கள் வெளியிடப்பட்டன. இந்திய நாட்டிலும் உலக நாடுகள் பலவற்றிலும் சைவ சித்தாந்தத் தத்துவத்துறையில் வல்லவர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்க முன் வந்தனர். பொதுமக்கள் பார்வையாளர்களாகப் பங்கேற்றுப் பயன்பெற விரைந்தனர்.

1984 மே 11, 12, 13, தேதிகளில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைவிழாவையொட்டி முதல் மூன்று நாட்களும் கருத்தரங்கத்தை நடத்துவதென முடிவாயிற்று. இந்திய நாட்டில் உள்ள சமய தத்துவப் பேரறிஞர்கள்பலரோடு பிரிட்டன், அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேஷியா, இலங்கை முதலிய பல நாடுகளிலிருந்து சைவ சித்தாந்த ஆய்வறிஞர்கள் பலர் கலந்துகொள்ள முன்வந்தனர்.

## முன்னேற்பாடுகள் :

ஆறுமாதங்களுக்கு முன்னரே விழாநடைமுறைத் திட்டங்கள் செயற்படுத்தத் தொடங்கப்பட்டன. மூன்றுநாள் கருத்தரங்கிலும் தத்துவ ஆய்வறிஞர்களாகப் பங்கேற்க நூறுபேர் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொண்டிருந்தனர். பார்வையாளராகக் கலந்துகொள்ள ஐநூறு பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருந்தனர். மேலும் சிறப்பு விருந்தினர்களாக வரும் தமிழக ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்கள், நீதிபதிகள், அமைச்சர்கள், தொழில் அதிபர்கள், பத்திரிகையாளர்கள், பெருமக்கள் ஆகியோர் பங்கேற்க இருந்ததால் விழாவை விரிவான முறையில் நிகழ்த்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் உத்தரவிட்டருளினார்கள்.

அவரவர்களும் தங்குவதற்கு இடவசதிகள், உணவு வசதிகள் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

## வரவேற்புக்குழு :

கருத்தரங்க விழாவை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளம்போல் விரிவான முறையிலும் சிறந்த முறையிலும் நடத்த மாயூரம் நகரப்பெருமக்கள் பலரும் முன்வந்தனர். முன்னாள் மாவட்ட ஆட்சியாளர் திரு. வை. ஆறுமுகம் பிள்ளை அவர்களைத் தலைவராகவும் வழக்கறிஞர் திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர் அவர்களைத் துணைத்தலைவராகவும் கொண்ட

வரவேற்புக்குழு அமைக்கப்பெற்றது. டாக்டர். திரு. எம். சுவாமிநாதன் வழக்கறிஞர் திரு. ஆர். இராஜசேகரன், திரு. சிவபுண்ணியம், திரு. ஞானசம்பந்தம், திரு. பாஸ்கரன் ஆகியோரும் பேராசிரியர் திரு. இராமலிங்கம், போட்டோ என். இராமகிருஷ்ண ஆகியோரும் உறுப்பினராக அமைந்த வரவேற்புக் குழுவினர் பலமுறை தருமையில் கூடிச் செயல் திட்டங்களை உருவாக்கினர்.

**விழா ஏற்பாடுகள் :**

தமிழகம் முழுதும் மக்கள் நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளக் கோயில்களிலும் முக்கிய இடங்களிலும் சுவரொட்டி விளம்பரங்கள் ஒட்டப்பட்டன. பத்திரிகை வானொலி வாயிலாகக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் மக்கட்குத் தெரிவிக்கப்பட்டன. மயிலாடுதுறை திரைப்படக் கொட்டகையில் ஸ்லைடுகள்மூலம் கருத்தரங்க அறிவிப்புச் செய்யப்பட்டது.

விருந்தினர்கள் தங்குவதற்குத் தருமையாதீனத்தில் எட்டு புதியவிடுதிகள் கட்டப்பெற்றன. மயிலாடுதுறையில் ஹலீமா, பாத்திமா, விஜயா லாட்ஜுகள் முழுவதும் மூன்று நாட்கள், வாடகைக்கு அமைத்துக்கொள்ளப்பட்டன.

விருந்தினர்களைத் தருமைக்கு அழைத்துவர வாகன வசதிகள் மினிவான், கார்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன. நகர் முழுவதும் ஆங்காங்கேகீற்றினால் வரவேற்புவளைவுகள் அமைக்கப்பட்டன. தோரணங்கள் எங்கும் கட்டப்பட்டன.

தருமையாதீனத் திருமடமும் அதனைச்சார்ந்த கல்விநிலையங்களும் மற்றும் கட்டிடங்களும் புதுப்பிக்கப்பெற்றுப் புதுவண்ணங்கள் தீட்டப்பட்டன.

திருக்கயிலாய தரிசன நினைவு வளைவு, வடக்குவீதி நுழைவு வளைவுகள் புதுப்பிக்கப்பட்டுப் புதுவண்ணம் தீட்டப்பெற்றுப் பொலிவுசெய்யப்பெற்றன. திருமடத்தின் முற்றத்திலும் திருக்கோயில்களிலும் கோடை வெம்மை தெரியாவண்ணம் கீற்றுப் பந்தல்கள் வேயப்பெற்றன. திருநெறிய தெய்வத்தமிழ் மன்றம் வஸ்திரப்பந்தலாக அழகுறுத்தப்பெற்று வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பெற்றது.

தருமபுரம் நான்கு வீதிகளுக்கும்கற்சாலை போடப்பெற்றது. வண்ண மின்விளக்குகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டன. சண்முக விலாசம் வளைவுகள் பந்தல், மன்றம் ஆகிய அனைத்திடங்களிலும் தொடர் மின்விளக்குகள் பொருத்தப்பெற்றன.

## உணவு வசதி :

அறிஞர்கள் சிறப்பு விருந்தினர்கள், பார்வையாளர்கள் அறுசுவைவிருந்துண்ண வடக்குவீதி, சண்முகநிலையத்திலுள்ள வேதசிவாகம பாடசாலை, வடக்குமடம் எனவழங்கும் தேவாரப் பாடசாலைக் கட்டிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

தமிழகத்தில் புகழ்பெற்ற அட்டிற்கலைவல்லுநர் நாகை, திரு. நாராயண ஐயர் அவர்களைக் கொண்டு சுவையான உணவுகளைத் தயாரித்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அனைவரும் குறித்த வேளைகளில் சென்று உணவருந்த உணவுச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

## துர்க்காதேவி திருக்கோயில் மகாமண்டபம் :

தருமபுரத்தில் விளங்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயில் திருமுன்னர், பெரும்பொருட் செலவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மகாமண்டபத் திருப்பணியைச் செய்து நிறைவேற்றியிருந்தார்கள். கருத்தரங்க முதல்நாள் விழாவில் இம்மகாமண்டபத்தைத்திறந்துவைக்கவும்தெய்விகக் கலைக்காட்சி ஒன்றை அம்மண்டபத்தில் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருமயிலாடுதுறை வழக்கறிஞர் திரு. ஞானசம்பந்தம், பேராசிரியர் திரு. இராமலிங்கம், வழக்கறிஞர் தாசில்பண்ணை திரு. இரா. இராஜசேகரன் ஆகியோர் கலைக் காட்சியைச்சிறப்புற அமைத்தனர்.

பாண்டிச்சேரி பிரஞ்சு இந்திய இன்ஸ்டிடியூட் நிறுவனத்தினரும் கலைக்காட்சி அமைப்புப்பணியில் ஈடுபட்டு நிழற் படங்கள் ஆகமச் சுவடிகள் முதலியவற்றை அமைத்துக் கலைக்காட்சியைப் பயனுடையதாகுமாறு செய்தனர்.

## சமயநூல்களின் விற்பனை நிலையங்கள் :

கும்பகோணம், திருநெல்வேலி சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகத்தினரும், வேதாரண்யம் கஸ்தூரிபா கன்னியாகுருகுலத்தினரும், சென்னைசேக்கிழார்பதிப்பகத்தினரும், திருப்பனந்தாள் அன்னபூரண பதிப்பகத்தினரும் புத்தக விற்பனை நிலையங்களை அமைத்தனர்.

தருமையாதீனம் ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடுகள், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் வெளியீடுகள் முதலியவை அன்னபூர்ண பதிப்பகத்தில்விற்பனைக்கு வைக்கப்பட்டன.

அலுவலகம் :

கல்லூரிக் கட்டிடத்திலமைந்த சாந்தநிலையம் கருத்தரங்க அலுவலமாக இயங்கியது. ஆதீனத் திருமடத்தின் தேவஸ்தான அலுவலக மேலாளர் திரு புலியூர் உடையான் அவர்கள் தலைமையில் ஆதீனத் திருமடத்தின் பணியாளர்கள் பலரும் கருத்தோடு கருத்தரங்கப் பணிகளைப் புரிந்தனர். ஆதீனம் தேவஸ்தானம் தணிக்கைக் கண்காணிப்பாளர் திரு. திருமூலநாதன் அவர்கள், பொருளாளராகப் பணிபுரிந்தார்.

விழாமலர்கள் :

கருத்தரங்கை ஒட்டிப் பல நூல்கள் விழாமலர்களாக மலர்ந்தன. சைவசித்தாந்தத்தைப்பற்றி ஆங்கிலத்தில் மேலை நாட்டறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்புநூலையும், ஆய்வு அறிஞர்களின் ஆங்கிலக்கட்டுரைகளின் சுருக்கநூலையும், தஞ்சை வழக்கறிஞர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் உருவாக்கினர். ஆய்வறிஞர்களன் தமிழ்க் கட்டுரைகளைப் பேராசிரியர் திரு, இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் தொகுத்தளித்தார். விழாமலரை கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. சொ, முத்தையன் எம. ஏ., அவர்கள், திரு. எம். சிவச்சந்திரன் எம். ஏ., அவர்கள் உருவாக்கினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசியுரைகளின் தொகுப்பு நூலாகிய திருவருட்செய்தி, திருமந்திரம், சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் ஆகியநூல்வெளியீட்டுப்பணியை புலவர் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., அவர்கள் உடனிருந்து சிறப்புறச் செய்துமுடித்தார்.

கருத்தரங்கில் 9 பயனுள்ள நூல்கள் விழா மலர்களாக வெளிவந்தன. கருத்தரங்கக் கட்டுரைமலர், கருத்தரங்க மலர், சைவசித்தாந்தம் பற்றி மேலை நாட்டறிஞர்களின் கருத்துரைநூல், திருவருட்செய்தி, திருமந்திரம் இரண்டாம் தொகுதி, சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கம், சைவ சித்தாந்தக்கட்டுரை மலர் சதமணிக்கோவை முதலிய நூல்கள் கருத்தரங்கில் வெளியிடப்பெற்றன.

ஹவாய் ஆதீனத்தின் சைவசித்தாந்தக்கொள்கையில்காணும் சில குறைகள் பற்றிய ஆய்வுநூல் ஒன்றை ஆதீனத்தின் சார்பில் ஆதீனம் தேவஸ்தானம் கண்காணிப்பாளர் திரு. டி. என். அருணசலம் அவர்கள் எழுதி வெளியிட்டார். மலேசியா வைச்சார்ந்த திரு. பாலசுந்தரம் அவர்களும் இச்செய்தி குறித்த நூல். ஒன்றை வெளியிட்டார்.


(தொடரும்)

தருமை ஆதீனத்தில்
அனைத்துலக சைவ சித்தாந்த முதற்கருத்தரங்கம்




வேத ஆகம புராண இதிகாச திருமுறை சித்தாந்த சாத்திர ஏட்டுச் சுவடிகள்
ஊர்வலத்திற்கு எழுந்தருளும் காட்சி

தருமை ஆதீனத்தில்
அனைத்துலக சைவசித்தாந்த முதற்கருத்தரங்கம்



பாரதிதாசன் பல்கலைக் கழகச் சார்பில்
அதன் துணைவேந்தர்
திரு. P. S. மணிசுந்தரம் அவர்கள்
ஆங்கிலத்தில் வரவேற்புரை நிகழ்த்துதல்.

தருமை ஆதீனத்தில்
அனைத்துலக சைவசித்தாந்த முதற்கருத்தரங்கம்



இந்தியப்பெருநாட்டின் முன்னாள் ஜனாதிபதி
மாண்புமிகு. B. D. ஜாட்டி அவர்கள்
கருத்தரங்கத்தைத் தொடங்கிவைத்து உரையாற்றுதல்

தருமை ஆதீனத்தில்
அனைத்துலக சைவசித்தாந்த முதற்கருத்தரங்கம்



காசிவாசி; கயிலைமாமுனிவர், குன்றக்குடி, காஞ்சிபுரம்
ஸ்ரீ மகாசந்நிதானங்களின் முன்னிலையில்
மகாலக்ஷ்மி துர்க்காதேவியின் மகாமண்டபத்தை
அறநிலைய அமைச்சர் திறந்துவைத்த காட்சி

# *குருவினை வணங்கிக் கூப்புவேன் என்கரம்!

திருமதி. சௌந்தரா கைலாசம்

தரணியெ லாம்புகழ் தருமையா தீனப்
பெருமையெ லாம்யான் பேசுதல் எளிதோ?
நீல மணிமிடற்று நித்தியன் யார்க்கும்
மூலபண் டார முதலைத் தருமிடம்!
தவநெறி உணர்ந்த சந்தான குரவர்கள்
அவனருட் புனலில் அமிழும் ஓரிடம்!
வழிவழி யாக வள்ளலின் தத்துவம்
மொழிந்திடப் பெற்ற மோனத் திருமடம்!
சற்குரு ஞான சம்பந்த ரவரால்
அற்புதத் தொடக்கம் அமைந்த திருவிடம்!
குருவென அவர்–இக் குவலயம் சிறக்க
அருளினைப் பொழிந்த அருமையுண் டிங்கே!
திருநெறித் தமிழ்உயர் சிவா னந்தமாய்ப்
பெருகி ஓடிடும் பெற்றியுண் டிங்கே!
தொல்வினை பற்றித் தொடரா தின்பம்
பல்கிட நடக்கும் பாதையுண் டிங்கே!
அருந்தமி முழுதும் அருள்நெறி யதுவும்
பொருந்தி இலங்கும் புண்ணிய பூமி!
உலகில் நிற்கும் ஒருபொருள் சிவம்! அதை
நலமுறத் தெரிதல் ஞானம் எனப்படும்;
தெரிந்தபின் நன்கு தெளிதல் போதமென்
றுரைத்தெல் லோரும் உய்ந்திடு மாறு
சத்திய ஞான தரிசனம் செய்து

---

* அனைத்துலகச் சைவ சித்தாந்த முதல் கருத்தரங்க விழாவின் முதல்நாளன்று (11-5-84) படித்தளித்த கவிதாஞ்சலி

வைத்திடும் அரிய வழக்கமுண் டிங்கே !
ஊனுடம் பதற்கிங் குற்றதாய் தந்தைபோல்
மானுட உயிர்க்கு மாதா பிதாவாய்
இறைவியும் இறைவனும் இலங்குகின் றுரென
உரைசெய் துலகுக் குணர்த்தும் இடமிது !
குருவே சிவமெனும் கொள்கையைக் கொண்டு
திருவருள் சேர்க்கும் சீர்த்தியுண் டிங்கே !
பெருமழை மண்ணில் பெய்த போதிலும்
ஒருபுயல் சாடி உலுக்கிய போதிலும்
இருந்த இடம்விட் டெங்குமே காமல்
குருபிரான் கொடுத்த விளக்கினை ஏந்தி
எங்கும் நல்லொளி இனிது பரப்பி
மங்கலம் பெருக்கிய மாண்புண் டிங்கே !
உண்மைக் குருவிடம் உடல்பொருள் ஆவியைத்
திண்ணிய மனத்துடன் சேர்த்திடும் சீலமும்,
குருபிரான் எடுத்துக் கூறிய வார்த்தைக்
கிருநில மதனில் ஈடிலை என்றே
அவனியில் வாழ்வோர் அறிந்திடக் காட்டிய
தவநெறி யதுவும் தழைத்த திங்குதான் !
பெருமைசேர் ஞான பிரகாச நற்குரு
அருமைசேர் ஞான சம்பந்த ரவர்பால்
ஆன்ம ஒளியை அழகுற ஏற்றிய
பான்மையை நினைந்தால் பரவசம் பெருகும் !
ஒருவிளக் காலே ஓரா யிரமாய்த்
திருவிளக் கேற்றச் செய்த போதிலும்
ஏற்றிய தீப எழில்குன் றுது
நாற்புற மதனின் நல்லொளி பாயும் !
நற்குரு ஞானமும் ஞானப்பிர காசமும்
பொற்புடன் ஒன்றிப் பொலிகிற திங்கே !
அருளறம் ஓங்கி அன்பின் தடத்தில்
தெருளுவ தாலே செழிக்கிற திங்கே !
சீரும் சிறப்பும் செந்தமிழ் வளர்க்கும்
பேரும் புகழும் பெருகிடு திங்கே !
சைவ நன்னெறி தழைத்திவ் வுலகை

உய்யச் செய்யுமோர் உயரிய ஆசையால்
ஆன்றோர் பலரை அழைப்பித் திங்கே
நான்மறை உணரா நாயகன் புகழை
நேசம் வளர நெக்குநெக் குருகிப்
பேச வைத்திடும் பெட்பினை எண்ணிப்
பெருமிதம் கொள்கிறேன் ! பெருமைக் குரியநம்
குருவினை வணங்கிக் கூப்புவேன் என்கரம் !
இருபத் தாறும் ஏந்தலாய் இந்நாள்
அருள்நெறி பரப்பும் அருந்தவச் சீலர்
மயர்வற உலகை வழித்தடம் செலுத்தும்
உயர்வினைக் கருதி உள்ளம் உவக்கிறேன் !
பன்னிரு திருமுறைப் பாடல்கள் எல்லாம்
இன்னிசை யாலே எழிலுறச் செய்வார் !
ஒப்பெதும் இல்லா உயர் வினைக் கொண்ட
அப்பரை எண்ணி அகத்தில் உருகுவார் !
காசினி எங்கும் கடவுள் நெறியது
தேசுடன் திகழச் செய்கைகள் செய்வார்!
தெய்வ நெறியினுல் தேசம் தழைக்கச்
செய்வதற் கென்றும் சிந்தனை செய்வார் !
பண்ணுயர் பைந்தமிழ் பாரினில் ஓங்க
எண்ணிலாப் பெரும் பொருள் எண்ணு தளிப்பார்!
ஆடிய பாதனின் அரும்புகழ் பரப்பக்
கோடி எனினும் கொட்டிக் கொடுப்பார் !
எவைஎவை நல்லவை என்றுகொள் வாரோ
அவைஅவை முற்றும் அழகுற முடிப்பார் !
அவர்சந் நிதியில் அருள்நெறித் திருவிழா !
சிவனருள் பொங்கச் சிறந்திடு மாமே.

கட்டுரை எண். 49

# அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit., D. P. P. A,. D, U. N., I. U.
பருத்தியூர்.

**சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்**
**படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்**
**இடருந் தவிர்த்திமைப் போதிருப்பார், பின்னும் [மெய்துவரோ!**
**குடரும் கொழுவும் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48**

### அ. சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்று.

(1) ஒளிரும் கலைகளையுடைய சந்திரனைப் பொருந்திய சடைமுடியுடன் கூடிய குன்று என இறைவனை வருணிக்கிருர்.

(2) தட்சன் சாபத்தால் கலையிழந்து, ஒளியிழந்து சென்ற மதியினை இறைவன் தனது சடையில் சூடியதனல் அவன் (மதி) அவற்றினை மீண்டும் பெற்று, சுடரும் கலைமதியாகிவிட்டான். அரும் பெருஞ்சோதியினை அணுகியவன் அவ்வாறு ஆவதில் வியப்பில்லை.

சிவம் என்ற குன்று சடையினையுடைய குன்ருகவும், அச் சடையினில் கலைமதியினையுடையதாகவும் காட்சிதருகிறது.

அசையாத நிலை, உயர்வு, வலிமை, திண்மை முதலிய இயல்புகள் கருதி இறைவனைக் குன்ருகவும், மலையாகவும் கூறுதல் மரபு. திருக்கயிலை, திருவண்ணமலை போன்ற மலைகளை இறைவன் திருவுருவமாகவே கருதி வழிபடுகிறேம்.

(3) "குன்றே அனையாய்! என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ?" என்ற விடத்து மணிவாசகர் இறைவனைக் 'குன்றே'! என அழைக்கிருர்.

(4) சிவபெருமான் ஒரு சிவந்தமலை. எனவே அவர் பவழமலை. அதுவும் முக்கட் பவழமலை. மலைத்தேன் என்பது மிகச் சிறந்தது! இனியது. இப்பவழமலையும், இனியத்தேனை அளித்திருக்கிறது. அதுதான் 'முருகன்' என்ற தேன் என்கிறார் சிதம்பர சுவாமிகள்

" முக்கட் பவளமலை வந்த தேனை முராரிதங்கை
பக்கத் தெடுக்கும் பரிமளப் பூவை "

என அவரது திருப்போரூர் சந்நிதி முறை பேசுகிறது.

(5) " வேடர் குலப்பிடிதோய் மலையே! மலை கூறிடு வாகையனே " என்ற கந்தரநுபூதி முருகனை மலை என்கிறது.

## ஆ. குன்றில் ஒன்றிப் படரும் பரிமளப் பச்சைக்கொடி.

(1) அச்சடைமுடிக் குன்றின் மீது பொருந்திப் படர்ந்து விளங்கும் நறுமணமிக்க பசிய கொடியினைப் போல் அம்பிகை விளங்குகிறாள்.

(2) இறைவனின் இயல்புகள் கருதி அவனைக் குன்று என்றது போல், இறைவியின் மென்மை, துவளும் இயல்பு, பற்றிப்படரும் இயல்பு முதலியன கருதி அவளைக் கொடியென்றார்.

அவளைக் கொடியென்றதன் காரணங்கள், அவள் பெற்ற பரிமளங்கள் முதலியன பற்றி முன் பாடல்களில் விரிவாகக் கண்டோம்.

(3) மலையில் படரும் பச்சைக் கொடிகள் மூலிகைகளாகி மக்களின் பிணிகள் பலவற்றையும் நீக்குகின்றன. சடைமுடிக் குன்றில் படரும் இம்மூலிகைக்கொடியே எவராலும் நீக்க வியலாத பிறவிப்பிணியினையே போக்கிவிடும் ஆற்றல் உடையது. அதுவும் அதனை நெஞ்சில் பதிப்பதனாலேயே போக்கி விடும் ஆற்றல் உடையது. அதனை அடுத்துவரும் அடிகளில் குறிப்பிடுகிறார்.

## இ. கொடியைப் பதித்து நெஞ்சில் இடரும் தவிர்த்து இமைப்போதிருப்பார்.

(1) அப்பரிமளப் பச்சைக் கொடியாகிய அன்னையினை யோகத்தால் இமைப்பொழுதேனும் நெஞ்சில் பதிக்க வல்லவர் இடர்கள் அனைத்தையும்தவிர்ப்பர். ஆனந்தானுபவம் எய்துவர்.

(2) கொடியைப் பதித்து நெஞ்சில் எனவும் நெஞ்சில் இடரும் தவிர்த்து எனவும் இருவழியும்கூட்டிப்பொருள்கொள்ளலாம். விளக்கேற்றியவுடன் இருள் நீங்குமாப்போலே கொடியைப் பதித்தவுடன் மூவகை இடர்களும் நீங்கிவிடுகின்றன.

(3) "சரண கமலாலயத்தை அரைநிமிட நேரமட்டில்" என்றவாறு 'இமைப்போது' என்கிறார். 'மாத்திரைப்போது' என்பார் பின்பும். அப்படியாயின் எல்லோருக்கும் மிகவும் எளிதாயிற்றே! இமைப்போது எண்ணிவிடுகிறேன்! மற்ற நேரங்களில் பிற செயல்களில் ஈடுபடுகின்றேன் என ஒருவர் எண்ணலாம். இது யோகத்தால் அடையும் பயனாகும். இடரும் தவிர்த்து அவனை இமைப்போது பதிக்கப்பலஆண்டுப்பயிற்சி வேண்டும். சிவயோகிகள் இப்படிப் பதிப்பவர் என்றும் மற்ற 'கர்மிகள்' மீண்டும் பிறப்புக்கு ஏதுவாக 'மரிப்பவர்' என்றும் கந்தர் அலங்காரம் விளக்குகிறது. அதனைப்பிறிதோர் இடத்தில் விரிவாகக் காண்போம்.

## ஈ. பின்னும் எய்துவரோ குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே

(1) அச்சிவயோகிகள் – குண்டலினி யோகிகள். குடல் கொழுப்பு, இரத்தம் முதலியனவற்றால் நிறைந்த இவ்வுடலாகிய குடிலில் வந்து பிறப்பு எய்துவரோ? எய்தார் என்றபடி.

(2) குரம்பை என்றால் சிறுகுடில் அல்லது வீடு என்று பொருள். அக்குடில் அருவருக்கத்தக்க பொருள்களான குடல், கொழுப்பு, குருதி முதலியனவற்றால் ஆகியிருக்கிறது. திருமுறைகளும் அருணகிரியாரின் பாடல்களும் இதனைப் பல இடங்களில் எடுத்துரைக்கின்றன.

(3) கால் கொடுத்தல், கையேற்றல், கழி நிறைத்தல், சுவர் எடுத்தல், வாசல் அமைத்தல், சாளரங்கள் அமைத்தல் போன்ற செயல்கள் அனைத்தும் புரிந்து இக்குரம்பையினைத் தந்தவன் இறைவனே என்கிறார் அப்பர் பெருமான்.

கால்கொடுத்து இருகையேற்றி கழிநிறைத்து இறைச்சிமேய்ந்து
தோல்படுத்து உதிரநீரால் சுவரெடுத்து இரண்டுவாசல்
ஏல்வுடைத்தா வமைத்தங்கு ஏழு சாலேகம் பண்ணி
மால் கொடுத்து ஆவி வைத்தார் மாமறைக் காடனாரே.

— அப்பர் தேவாரம்.

" துருத்தியாங் குரம்பைதன்னில் தொண்ணூற்றங் கறுவர் " என்ற திருவதிகை வீரட்டானப்பதிகத்திலும் அப்பர் ' குரம்பை ' என்றே குறிப்பிடுகிறார்.

(4) மணிவாசகரின் சிவபுராணம் " மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடில் " என்கிறது.

" வேற்று விகார விடக்கு உடம்பின் உட்கிடப்ப ஆற்றேன் " என்பார் மீண்டும். மற்றும் " மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லான் " என்ற அடிகளில் அவனே அக்குரம்பையைக் கட்டவிழ்க்க வல்லவன் என்பதையும் சிவபுராணம் கூறுகிறது.

" தோலாற் சுவர்வைத்து, நாலாறு காலிற் சுமத்தியிரு
காலாலெழுப்பி, வளைமுதுகோட்டி, கைநாற்றிநரம்
பாலாற் கையிட்டுத் தசைகொண்டு வேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத்தான் இருதாளன்றி வேறில்லையே "

— கந்தரலங்காரம்.

தெய்வத்திரு மலை செங்கோட்டில் வாழும் செழுஞ் சுடரே!
வை வைத்த வேற்படை வானவனே! மறவேன் உனை நான்
ஐவர்க் கிடம் பெறக் காலிரண்டு ஓட்டி அதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே "

— கந்தரலங்காரம்.

" குரம்பை மலசலம் நிணமொடு
எலும்பு அணிசிரி தசையிரல் குடல்நெதி
குலைந்த செரிமயிர் குருதியோடிவை பல கசுமாலக்குடில் "

என்ற திருப்புகழில் அசுத்தங்கள் கலந்த இக் குடிலை 'கசுமாலக் குடில்' என்கிறார் அருணகிரியார் இன்றும் அசுத்தமானவற்றை அல்லது அசுத்தமானவனைச்சென்னை நகரக்கொச்சைத் தமிழில் ' கஸ்மாலம் ' எனக்குறிப்பிடுகின்றனர்.

மேற்கண்ட பொருட்களாலான உடலையும் குடிலையும் பின் வருமாறு ஒப்பிடுகின்றனர்.

இருகால் – இரு தூண்கள்
எலும்புகள் – செங்கற்கள்
நிணம் – சேறு ( கலவை )
இருகரம் – கொடுங்கைகள்
முதுகெலும்பு – உச்சிமேட்டுவளை
பக்கவிலா எலும்புகள் – கழி அல்லது ' சாத்து '

வாய் – தெருவாசல்
கீழ்வாய் – கொல்லைப்புறவாசல்
கண் 2
காது 2 } – ஆறு சாளரங்கள்.
நாசித்துவாரம் 2
நீர்வரும்வழி – தோட்டத்துச் சாளரம்
தலைமயிர் – கூரைமேல் இடும் புல்
தோல் – பூச்சு வேலை
உள்ளேவாழ்பவன் – உயிர் அல்லது ஆன்மா
அமைத்தவன் – இறைவன்

பெரியோர் இவ்வசுத்தக் குடிலையே இறைவனின் இருப்பிடமாக்கி, கோயிலாகவும் மாற்றவல்லவர்கள். அத்தகைய ஞானிகளே இக்குடிலில் புகாவழியினை வேண்டினர்.

(6) அன்னையினை யோகத்தால், இறைவனுடன் இணைந்த கோலத்தில் பதிக்கவல்லவர்கள் மீண்டும் இக்கள்ளப் புலக் குரம்பையில் புகார். ஏனெனில் அவள் 'ஜன்ம – ம்ருத்யு – ஜரா–தப்த–விச்ராந்தி – தாயினி' அதாவது பிறப்பு இறப்பு நரை திரை முதலியவற்றால் தகிக்கப்பட்ட உயிர்களுக்கு 'விச்ராந்தி'(ஓய்வு) அளிப்பவள். இவ்வாறு சகஸ்ரநாமம் புகழுகிறது. மற்றும் பவநாசினி – பிறப்பை அழிப்பவள் எனவும் குறிப்பிடுகிறது. சிவயோகம் சித்தித்தல் இப்பாடலின் பாராயணபலன் ஆகும்.

---

## பிள்ளையார் சுழி

அருட்பெருஞ்சோதியாகிய சிவ சோதியிலிருந்து, மூலப் பிருகிருதியாகிய மாயையென்னும் கரியகோணத்தில் அறிவற்றுக் கிடந்த எண்ணில்கோடி உயிர்கட்கு அருளும்பொருட்டு, தனிப் பெருங் கருணையாகிய பராசக்தி தோன்றியது, அதினின்றும் ஆதிசக்தி தோன்றியது. அதினின்றும் ஞானசக்தியும், அதினின்று கிரியாசக்தியும், அதினின்று இச்சாசக்தியும் தோன்றியது. அந்த இச்சாசக்தி விந்து என்ற சுத்தமாயையில் பாய்ந்தது. அதன் ஆற்றலைத் தாங்கமாட்டாது விந்து சுழன்றது. அதினின்றும் நாதம் தோன்றியது விந்து சுழியாகவும் நாதம் நீண்ட கோடாகவும் காட்சியளித்தது அதுதான் நம் முன்னோர்கள் எழுதத்தொடங்குமுன் முதலில்எழுதுகின்ற உ என்ற பிள்ளையார் சுழி. பிள்ளையார் முதற் கடவுள். இது முதலில் எழுதும் விந்து நாதக் குறி. ஆதலால் பிள்ளையார்சுழி எனப்பெற்றது.

— திருமுருக கிருபானந்தவாரியார்

# திருவருட்பாத் திரட்டு

( பொழிப்புரையுடன் )

**வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,**

( மலர் 43, இதழ் 5, பக்கம் 267 இன் தொடர்ச்சி. )

## 4. ஸ்ரீகாசி விருத்தகாளேச்சுரர் திருவருட்பா

சீரனே கம்குலவுந் தெய்வமே செங்கணர(வு)
ஆரனே அற்புதனே அம்பலவா தென்கமலை
ஊரனே அஞ்சலென்பா யுன்சரண நம்பிநின்றேன்
வீரனே காசி விருத்தகா ளேச்சுரனே. 1

( பொ – ரை ) காசியில் எழுந்தருளியிருக்கும் விருத்த காளேச்சுரனே! எண்ணற்ற பெருமைகளோடு கூடிய தெய்வமே! சிவந்த கண்ணுடைய பாம்பு மாலையுடையோனே! அற்புதனே! அம்பலவனே! தென்கமலையிலும் இருப்பிடங் கொண்டோனே! உன் திருவடிகளை நம்பினேன். அஞ்சலென அருள்வாய்.

( கு – ரை ) தென்கமலையும் கயிலையும் கிரியுமுறை சிவ லோகனே என ( 3–10 ) முன்னும் குறித்ததறிக கமலை என்ற திருவாரூரை ஈண்டும் குறித்தார் தன் குருநாதரின் 'குரு' இருந்த ஊர் என்ற பற்றுதல் காரணமாக, இப்படியேயான பற்றை ஸ்ரீ குமரகுருபரரும் தம் ஆசிரியராம் ஸ்ரீ மாசிலாமணி தேசிகரைத் 'தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்த' பெருந்தகையெனக் குறிப்பிடு கிறார். ( பண்டாரம். மும். 8–13–14 வரி. )

சித்துருவும் நீறுந் திருவருள்சேர் செம்முகமும்
பொத்தகமும் அக்கினியும் பொங்கரவும் மெய்ஞ்ஞான
முத்திரையுங் காட்டுகுரு மூர்த்திகொடு வந்தருள்வாய்
வித்தகனே காசி விருத்தகா ளேச்சுரனே. 2

( பொ – ரை ) மேலாந்திறமுடையோனே! அறிவாம் திரு மேனியுடன் திருநீறும் திருவருள்கூடிய சிவந்தமுகமும், புத்த கமும், நெருப்பும், கோபமான அரவம், மெய்ஞ்ஞான முத்திரை யும் காட்டும் குருமூர்த்தி வடிவில் வந்தருள்வாயாக.

(கு - ரை) பொத்தகம் - ஓலைச்சுவடிகளை நடுவில் துளையிட்டுக் கயிற்றால் இணைத்துக்கட்டிய அமைப்பு பொத்தலகம் - எனக்காரணக் குறியாக முன் குறித்தது பின் தாளில் அச்சாக வந்தும்கூட அப்படியே சிறிது மருவி வழங்கியது- பொத்தலகம் பொத்தகம், புத்தகம்.

திருக்கரத்தில் புத்தகமிருத்தலை ' ஓர் சிவஞான புத்தகமும் ' என்றும், கரத்தில் அக்கினியிருப்பதை ' மேலான தெய்வம் நாமன்றி வேறில்லை இது மெய்யென்று எடுத்த கனலும்' என்றும் இவரே பின்னே ( 13 - 1 ) குறிக்கிறார்.

புத்தகம் - ' கையிற் றம்போல், பன்னெடுநாள் பழகிய் தோர் தனிப்பெரிய புத்தகமும் பக்கஞ் சேர்த்தி ' - எனக் குறிப்பிடுவார் பரஞ்சோதியார். (திருவிளை. விருத்த, கு. பா. 19.)

சோதியனே மாமலைவாழ் சுந்தரியோர் மெய்யிலொரு
பாதியனே யேகபர மானந்த நாயகனே
ஆதியனே நாயேனை யஞ்சலஞ்ச லஞ்சலென்பாய்
வேதியனே காசி விருத்தகா ளேச்சுரனே. 3

(பொ - ரை) ஒளிமயமானவனே ! பெரிய பொன்மலையில் வாழ்கின்ற அழகியை மெய்யில் ஒரு பாதியாகக் கொண்டோனே ! ஒன்றான ஆனந்தமான முதல்வனே ! வேதந் தந்தவனே ! நாய் போன்றவனும் என்னை அஞ்சல் என்று கூறிக் காத்திடுக.

(கு - ரை) மலைவாழ் சுந்தரி-மலையரசன் புதல்வி. அஞ்சல் என மும்முறை அடுக்கிய வகையில் இவர் தமது அச்ச உள்ளத்தையும் இறைவனது அருளுறுதியையும் ஒருசேரக் காட்டினார். ' முன்றடுக்கு நாக கங்கணர் அமுத வாக்கு - நில்லு கண்ணப்ப ' - என்றபோது ( பெரிய-கண்ணப்பர் - 183 - பா ) திருவருள் உறுதி தெரிந்தது. வேதியன் - மறை முதல்வன். ' வேதியா வேத கீதா விண்ணவரண்ணா ' - ( திருநாவு 4 - 62 - 1 த. ஆ. வெ. எண் 391 - 1957 )

கமலமலர் மேலயனும் கட்செவிமேல் நாரணனும்
தமலமக லாமலே தாழ்முடிகள் தேடவே
அமலமாய் நின்ற யநாதநீ யஞ்சலென்பாய்
விமலனே காசி விருத்தகாளேச் சுரனே. 4

(பொ – ரை) தாமரை மேலுள்ள பிரமனும் ஆதிசேடன் மேலுள்ள நாராயணனும் ஆணவம் அகலாமல் தாளையும் முடியையும் தேடும்படி மலங்களை நீங்கினவனுகியும் அநாதியாகவும் நின்ற நீ எனக்கு அஞ்சலென்று அபயந்தருவாய்.

(கு – ரை) ஆணவத்துக்கு எட்டாதவன் அன்புக்குள் அகப்படுதல் உண்மை. அன்பெனும் வலையுள் அகப்படும் மலையே – ( அருட்பிரகாச வள்ளலார் ) கட்செவி – பாம்பு.

கண்ணே அதற்கு செவியாகவும் வேலை செய்யும் ' சுண் கேள்வி கவைநாவின் நிறனுற்ற அரா ' – (புறநா – 382) 'கந்துக மதகரியை வசமா நடத்தலாம்' என்ற பாட்டில் 'கட்செவி எடுத்தாட்டலாம்' – என்பார் தாயுமானவர். (பா–118) ... நிறை அணி இப்பாட்டில் அமைந்தது.

ஆணவத்துடன் பிரமன்மால் தேடினமை;

பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதமையாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் ரு...

— ( திருமந் – 2 – ம் தந்தி – 372 பதிப்பு – திருவாவடுதுறை வெளி – எண் – 290 – 1976 )

' புண்டரீகக் கண்ணனும் பூவின்மேலைப் புத்தேளும் காண்பரிய புராணன் ' – ( திருநாவு – 6 – 30 – 9 )

கூற்றினைப்போல் முன்னே குரம்பைப் பிணியதன்மேல்
வேற்றுநர கங்களைப்போல் வேறுபிணி மேவுதலால்
ஆற்றே னடியேனை அஞ்சலஞ்ச லஞ்சலென்பாய்
வீற்றிருக்குங் காசி விருத்தகா ளேச்சுரனே. 5

(பொ – ரை) கருப்பையுள் நுழையும் வேதனையே கூற்றுவன் பிடிக்குள் சிக்குவது போலவும் பின் மற்றைய பிணிகள் நரக வேதனைகளாகவும் அமைகின்றன. ஆகவே இத்தனை பிணிகளுக்கும் ஆற்ருமல் தளர்ந்த என்னை அஞ்சல் என்றுகூறி அருள்செய்க.

(கு – ரை) குரம்பை – முட்டை: ' குடம்பை தனித்தொழிய " (குறள் – 338) என்ற இடத்தில் முன்தனியாத முட்டை தனித்துக்

கிடப்ப அதனுள்ளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து உடம்பிற்கும் உயிர்க்குமுளதாய நட்பு என்று பரிமேலழகர் எழுதுகிருர். குரம்பை - குடில் என் பொருளிலும் வரும். உடம்பில் உயிர் குடியிருப்பதால் உடம்பு குடில்-குரம்பை எனப்படும் 'குடியிருக்கும் புன்குரம்பை குலைந் திடுநாள்' - (காசி - கல - 39). 'அ ந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி' — (சிவ - போத - சிறப்புப் பாயிரம்) உவம ஆகுபெயராய் வந்தது காண்க.

ஈண்டு அஞ்சல் என்ற அடுக்கு சலிப்புணர்விஞல்வந்தது. ஆற்றேன் - எனத் தம்மாட்டாமையை வெளிப்படுத்தினர்.

"மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே — நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னைக்
கருப்பையுள் வாராமல் கா"

என்று பட்டினத்தாரும் சலித்துக் கூறியவகை காண்க.

(தொடரும்)

---

# பிரார்த்தனை

"பிரார்த்தனைதான் என்னைக் காப்பாற்றி வருகிறது. அது இல்லாமலிருந்தால் பல ஆண்டு களுக்கு முன்பே எனக்குப் பைத்தியம் பிடித்திருக் கும்."

"இறைவனிடம் முதலில் எனக்குப் போதிய நம்பிக்கை இல்லாதிருந்ததால், அவரைக் குறித்த பிரார்த்தனை முதலியவைகளில் நான் அவநம் பிக்கை கொண்டிருந்தேன். இதனல் வாழ்வில் ஏதும் ருசியில்லாமல் இருந்தது. பிறகுதான் தெரிந்துகொண்டேன். உடலுக்கு எவ்வாறு உணவு அவசியமோ அவ்வாறே ஆன்மாவிற்குப் பிரார்த்தனை அவசியம்."

— மகாத்மா காந்தி.

# கேதாரம் நோக்கி....!

திரு. வி. ஆறுமுகம் ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

( மலர் 43, இதழ் 5, பக்கம் 270 இன் தொடர்ச்சி.)

## 10. திருக்கேதார தரிசனம்

கௌரிகுண்டத்தில் கௌரிக்கு எடுக்கப்பட்ட பழைய கோயில் ஒன்று இருக்கிறது. பார்வதிதேவி சிவபெருமானைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதற்காகத் தவம் செய்த இடம் இது என்று சொல்கிறார்கள்.

கௌரி ஆலயத்துக்குப் பக்கத்தில் வெந்நீர்க்குண்டமும் தண்ணீர்க்குண்டமும் உள்ளன. பக்கத்தில் ஒரு கந்தக மலை. அதிலிருந்து ஒருபகுதிநீர், வெந்நீர்க்குண்டத்துக்கு வருகிறது. இன்னொரு பகுதிநீர் அருகில உள்ள மந்தாகினி நதியில் கலக்கிறது. வெந்நீர் கந்தக மலையிலிருந்து வருவதால் அதில் நீண்ட நேரம் குளிப்பது உடல் நலனுக்கு ஏற்றதல்ல.

கௌரிகுண்டத்தில் நாங்கள் ஒரு பயண அனுபவத்தைப் பெற்றோம். பயணக்கட்டுரை ஆதலால் அதை எழுதாமல் போக எனக்கு மனம் இடம்தரவில்லை.

போலந்து நாட்டிலிருந்து வந்த ஒரு பெண்ணை அங்குச் சந்தித்தோம். அவள் பெயர் சசீலியா. அவளுடன் சற்று நேரம் உரையாடினோம். அவள் சொன்னாள், " இந்தியநாடு உள்ளம் கவரும் அழகுநிறைந்த நாடு. இதை ஒருமுறைவந்து ரசித்துவிட முடியாது. பலமுறை வரவேண்டும் " என்று. அவளுக்குத் திருமணம் ஆகவில்லை. 'காரணத்தைக் கேட்போமே' என்று கேட்டுவைத்தேன். அவள்கூறிய பதில் எங்களை வியப்பில் ஆழ்த்தியது.

" வயதாகியும் திருமணம் செய்துகொள்ள வில்லையே என்று தானே கேட்கிறீர்கள்! தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட்டுக் குடும்பபாரத்தைச் சுமக்க எனக்குச் சிறிதும் விருப்பமில்லை; நான் திருமணம் செய்து கொண்டிருந்தால் இதுபோன்ற அழகான இடங்களைச் சுற்றிப்பார்க்க முடியுமா ? " – அவள்

இப்படிச் சொன்னாள்; இயற்கை ரசிகையாகத் தன்னைக் கருதிக் கொண்டாள். நல்வினையால் அவளுக்குத் தெய்விக யாத்திரை கிட்டியிருப்பதை அவள் அறிந்திருக்க நியாயம் இல்லை.

செப்டெம்பர் 26. திங்கட்கிழமை. காலைமணி 4. மகிழ்ச்சியோடு எழுந்து கௌரிகுண்டத்தில் நீராடிக் கேதாரம் புறப்பட்டோம். பதின்மர் குதிரையிலும் எட்டுப்பேர் தண்டியிலும் மூவர் நடந்தும் சென்றோம்.

தண்டியில் செல்ல ரூ. 300, குதிரையில் செல்ல ரூ. 110 கட்டணம் ஆகிறது. நான் குதிரையில் சென்றேன். இங்கே எனக்குக் கிடைத்த குதிரையின் பெயரும் வசந்தி.

ராம்பரா என்ற ஊர்செல்லும்வரை வழிநெடுகக் காடுகள்; இடையிடையே அற்புதமான அருவிகள். ஏறத்தாழ 5. கி. மீ. பாதை கடுமையான ஏற்றப்பாதையாக உள்ளது. அதன் பிறகு கருர்சட்டி அடைகிறோம்; காடுகள் இல்லை; மலைப்பாறைகள் மிகுதி.

கவுரிகுண்டம் 7400 அடி உயரத்தில் உள்ளது. ராம்பாரா 9700 அடி உயரம். கருர்சட்டி 12000 அடி உயரம். கருர்சட்டியிலிருந்து கேதாரம் 3. கி. மீ. உள்ளது. 1400 அடி உயரத்தைக் கடக்கவேண்டும். இந்தப்பாதை சீரான ஏற்றத்துடன் செல்கிறது.

காலை 6 மணிக்கெல்லாம் ராம்பரா அருகில் வந்துவிட்டோம் எதிரே வானளாவிய சிகரம்; பனியால் மூடப்பட்டிருந்தது; சூரியனின் இனிய உதயம்; ஒளி, மலையில் படுகிறது. மலை உச்சியில் மஞ்சள் கதிர்கள் வெள்ளிமலைக்குத் தங்கத் தகடு பரப்பு கின்றன. அதுதகதகஎனமின்னும்அற்புதஒளிப்பிழம்பாய்இனிய காட்சி தந்தது. "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என்று பாடினரே அப்பர் – அவர் வாக்கு நினைவில் நிழலாடியது.

குதிரையில் சென்ற நாங்கள் பதின்மரும் காலை 9 மணிக்கெல்லாம் கேதாரத்தை அடைந்தோம். அந்தப் புண்ணியப் பேற்றைச் சொல்ல ஒருநாக்குப் போதாது. 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்ற அருள் வாக்கை நினைப்பதைத் தவிர வேறு சொல்வதற்கில்லை.

திருமடத்துக்கு மிகவும் அன்பொடு பணிசெய்யும் தொண்டர் திரு. ஜெயகணேஷ்சங்கர் வாஜ்பாய் நாங்கள் இறை வழிபாடு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தார்.

காலை மணி 10 – தண்டியில் வருபவர்களும், நடந்துவருபவர்களுமான அன்பர்கள் கேதாரத்திற்கு வந்து சேரவில்லை. கயிலைமா முனிவர் எங்களைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். வழிபாடு தொடங்கிற்று. சங்கல்பம் செய்து கொண்டோம். முதலில் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்த கயிலைமா முனிவர் எங்களையும் பால் அபிஷேகம் செய்யச் சொன்னார்கள்; அபிஷேகம் செய்தோம்.

அப்போது, நடந்து வந்தோருள் இருவரும், தண்டியில் வந்த நால்வரும் வந்துவிட்டனர். சந்திரசேகர ஓதுவாமூர்த்திகள் மட்டும் வரவில்லை.

அருள்மிகு கேதாரநாதருக்குக் கயிலைமாமுனிவர் அபிஷேகம் செய்தார்கள். எங்களையும் அந்நெறியில் ஈடுபடுத்திப் பால் அபிஷேகம் செய்யும்படி பணித்தார்கள். பாலால் அபிஷேகம் செய்து மலரிட்டு அருச்சித்து நாங்கள் அன்று ஆற்றிய வழிபாடு நெஞ்சில் பசுமையாக நிறைந்திருக்கிறது. 'வண்டுபாட, மயிலால, மான்கன்று துள்ள, வரிக்கொண்டைபாய, சுனை நீல மொட்டு அலரும்கேதாரத்தில்எழுந்தருளிஉலகமெலாம்காக்கும் நாதரின்மேல் நெய்பூசி, வழிபட்டபோது உள்ளம் கரைய, உரோமம் சிலிர்த்தது. கேதாரநாதருக்கு, கேதாரத்தின் அருகில் உள்ள பிரமகுண்டம் என்ற ஊரிலிருந்து கொண்டு வரப்படும் பச்சைநிறத் தாமரைப்பூ விசேஷமாகச் சாத்தப்படுகிறது.

வேண்டத்தக்கது அறியும் இறைவனிடம் – வேண்ட முழுதும் தரும் நாதனிடம் – 'வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன் விருப்பு அன்றே' என்பதைத்தவிர – மணிவாசகரின் மணிமொழியைக் கூறுவதைத் தவிர – வேறு என்ன வேண்டுவது! அதைத்தான் நான் வேண்டினேன்.

காலை 11 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நிறைவுற்றன. சங்கர் பண்டாவினுடைய இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி உணவு உண்டோம். மணி 12 ஆகிவிட்டது; ஓதுவாமூர்த்தி வரவில்லை! வேறு ஏதும் தோன்றவில்லை; புறப்பட்டோம்; மூன்று கிலோ மீட்டர் தூரம் – கேதாரப் பெருமானை மனத்தகத்து நினைத்தவாறே – இனிய நினைவுகளோடு மீண்டு வரும்போது – எதிரில் ஓதுவாமூர்த்திகளைக் கண்டோம். அவர் இன்னும் கேதார வழிபாடு ஆற்றவில்லை. அவரைத் துரிதப்படுத்தி அனுப்பி, வரும்போது குதிரையில் வர ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பினோம்.

இறைவன் அருள் கை கூடாவிட்டால் அவனைத் தரிசிக்கக் கூடமுடியாது! 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்ற திருமொழிக்கு அன்று விளக்கம் கிட்டியது. ஓதுவா மூர்த்திகள் கேதாரம் கோயிலுக்குப் போனபோது கோயில் மூடப்பட்டுவிட்டது. கேதாரநாதர் தரிசனம் அவருக்குக் கிட்டவில்லை. திருக்கோயிலை வலம் வந்து கௌரிகுண்டத் திற்குத் திரும்பினர். பல காததூரம் பயணம் செய்தும் பரமனைத் தரிசிக்க முடியாமல் போனது குறித்து அவர் மனம் என்ன வேதனைப்பட்டிருக்கும். திருக்கோயிலைத்தரிசித்ததும் ஒருபெரும் புண்ணியப் பேறல்லவா! அதுவும்கூட திட்டப்படி இல்லாமல் அவருக்கு எதிர்பாராமல் கிடைத்தது!

கேதாரம் ரிஷிகேசத்திலிருந்து 223 கி. மீ. தூரத்தில் உள்ளது. கௌரிகுண்டம் வரை – 210 கி. மீ. வரை பஸ்வசதி உண்டு. மீதி 13 கி. மீ. தொலைவை நடந்தோ, குதிரையிலோ, தண்டி யிலோ தான் கடக்கவேண்டும்.

கேதார நாதரைப்பற்றிப் புராணவரலாறுகள் பல உண்டு. "குருக்ஷேத்திரப் போர் நடந்து முடிந்தது; பாண்டவர்கள் தங்கள் பாவத்தைப்போக்கிக் கொள்ள எண்ணினர்; காசிக்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக்க விரும்பினர். காசிக்குச் சென்றனர்; சிவபெருமான் இவர்களைக் கண்டதும் பசு உரு எடுத்து மறையும்போது, பீமன் அந்தப்பசுவைப் பிடிக்க அதன் கொண்டையைப் பற்றினன். பசு பூமியுள் அழுந்தியது. அந்தக் கொண்டைப் பகுதிதான் கேதாரத்தில் வெளிப்பட்டுக் காணும் கேதாரநாதர்" – இப்படிப் பல.

கேதாரநாதர் ஒருசிறு குன்றுபோல் காட்சி தருகிறார்! இலிங்கம் போன்ற தோற்றம் அது. சுற்றிலும் – மூன்று பக்கமும் மலைகள்; இவைஇலிங்கத்தைச்சுற்றியுள்ளபீடம்போல் விளங்கு கின்றன. ஒருபுறம் திறந்தவெளி. இது கோமுகிபோல் அமைந் துள்ளது.

இந்த இனிய தரிசனம் திருவருளாலும், குருவருளாலும், கயிலை மாமுனிவரின் நல்லருளாலும் அல்லவா எங்களுக்குக் கிடைத்தது!

மாலை 3–30க்குக் கவுரிகுண்டம் வந்து 5–30க்குப் புறப்பட்டு ருத்ரப்பிரயாக் வந்து சேர்ந்தோம். இன்னும்' பத்ரிநாத் பயணம் இருக்கிறதே! – அதையும் எண்ணி மகிழ்வோடு ஓய்வு கொண்டோம்.

(தொடரும்)

# திருநாளைப்போவார்

**வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன்** எம். ஏ.,

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 6—5—84 ஆங்கில மாத முதல் ஞாயிறு அன்று வழங்கிய அருளுபதேசத்தைஒட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

இன்னும் நான்கு நாட்கள் தான் இருக்கின்றன, வரலாறு படைக்கும் அனைத்துலகச் சைவ சித்தாந்த முதல் கருத்தரங்க விழா நிகழ்வதற்கு!

மிகப்பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது! வருவோர் தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடுகள் ஆகிக்கொண்டிருந்தன. தொலைபேசி மணியின் அலறல்கள் ...... அலுவலகத்தின் பரபரப்பு ......சுறுசுறுப்பு !

திருநெறிய தெய்வத்தமிழ் மன்றம் அலங்காரம் பெறத் தயாராகிக் கொண்டிருந்தது, மணமகளைப் போல !

கருத்தரங்க வெளியீடுகளை அள்ளித்தந்துகொண்டிருக்கும் 'ஞானசம்பந்தம்' அச்சகத்தின் இயந்திர ஓசையிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு வெளியே வருகிறேன்; திருமடத்தைநோக்கி விரைகிறேன். மணி 9-55.

திருக்கோயில் தரிசனம் முடித்து குருமணிகள், கருத்தரங்க முன்ஏற்பாடுகளை நேரில் கவனித்து ஆணைகள்பிறப்பித்தவாறே திருமடத்தின் உள்ளே எழுந்தருளுகிறார்கள்.

அன்பர்களும் அடியேனும் குருநாதரின் பின்னே சென்று பணிவுடன் பண்டாரக் கட்டுக்குள் நுழைகிறோம்;

சற்றுக்கூட ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை அவர்கள்! சித்ராசனத்தில் அமர்கிறார்கள். திருநீறு பெறுகிறோம்; அமர்கிறோம்; பிரார்த்தனை தொடங்கி நிறைகிறது.

குருமணிகள் உபதேசம் தொடங்குகிறார்கள். திருநாளைப் போவார்நாயனர் புராணம் அன்றைய சிந்தனை.

" திருநாளைப் போவார் என்றால் பலருக்குத் தெரியாது; நந்தனார் என்றால் எல்லாருக்கும் புரியும் " என்று, பழக்கமாக மக்கள் வழங்கும் பெயரை - இயற்பெயர் என்று அறிமுகப் படுத்துகிறார்கள்.

" நாயனார் வரலாறு இக்காலத்தில் ஆராய்ச்சிக்குரியதாக இருக்கிறது; பின்னே வந்தவர்கள் இதனை ஜாதி அடிப்படையில் நோக்கினார்கள் ' என்று அடிப்படைக்கருத்தைத் துல்லியமாக விளக்கினார்கள்.

சாதிகள் சமுதாயத்தில் பெற்றுள்ள இடம்பற்றிப் பலகருத்துக்களை அருளிய குருமணிகள் இந்த நூற்றாண்டின் இடைக் காலம் வரை இருந்த அமைப்பைப்பற்றிக் குறிப்பிட்டார்கள் " அவரவர்க்கு வகுத்த நெறியைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் " என்று உபதேசித்தார்கள். " ஒழுக்கம் ஒன்றே மனிதனை உயர்த்துவது; " ஒழுக்கம் குன்றியவர் கீழோரே " என்ற தத்துவத்தை நந்தனார் வரலாறு நமக்குக் காட்டுகிறது எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

அடுத்து, சாதி என்ற பாகுபாடுபற்றிய உண்மை நிலையை - அது என்றும் உண்டு - எங்கும் உண்டு என எளிய எடுத்துக் காட்டுக்கள் மூலமாக விளக்கம் தந்தார்கள்.

மாம்பழத்தில் எத்தனை சாதிகள் - வகைகள்! மரங்களில் தான் எத்தனை வகை? இரங்கூன் தேக்கின் உபயோகமும் சவுக்கு மரத்தின் உபயோகமும் ஒன்றாய் விடுமா? இப்படி எடுத்துக் காட்டுக்கள் தந்த குருநாதர் ஓர் வினாவையும் எழுப்பு கிறார்கள்.

ஓர் அலுவலகம் எழுத்தர் இல்லாமலும் இயங்க முடியும்; தோட்டி இல்லாமல் ..... ?சிந்திக்க வேண்டியதுதான் ! "தாழ்வு என்றோ, உயர்வு என்றோ நாம் தள்ளிவிடக்கூடாது. வாழ்வியல் நெறிமுறைகளைத் தரம், தகுதிகளை உணர்ந்து மதிக்கவேண்டும்" என்றசிந்தனையை நமக்கு உணர்த்தினார்கள்.

அடுத்து ஓர் ஆய்வுரையை நம் சிந்தனைக்கு விருந்தாக்கு கிறார்கள். தமிழர்கள் இங்குவாழுமுன்பு வாழ்ந்த-ஆதிகாலத்தில் வாழ்ந்த திராவிட இனத்தவர் ஆதி திராவிடர். இக்கருத்தைத் திரு. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் ( பரிதிமாற்கலைஞர் ) எழுதியுள்ளதாகச் சான்று காட்டினார்கள்.

'எல்லாக் குலத்திலும் உயர்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அதுபோலவே தாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள்; சத்துவகுணம் இருக்குமானால் உயர்ந்த பண்புவரும்' என்று உபதேசித்து, உயர் நெறியை எவரிடமிருப்பினும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்பதை,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்னும் திருக்குறள் கொண்டு புலப்படுத்தினார்கள்.

குருமணிகள், புதியநோக்கில் சிந்திப்பதில் வல்லவர்கள்! 'ஹரிஜன்' என்றசொல்லைப்பற்றிய சிந்தனையை வழங்கினார்கள். 'காந்தியடிகள் ஹரிஜன் என்ற பெயர் வடிவத்தை நமக்கு அறிமுகப் படுத்தினார்; 'சிவஜன்' என்று அவர்களை வழங்க ஆதாரங்கள் உண்டு" என்று அருளி, இராமானுஜர் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை நினைவு கூர்ந்து, சம்பு, சாம்பவான் சாம்பான் முதலிய வழக்குகளை ஆதாரம் ஆக்கினார்கள்.

இங்ஙனம் குடிப்பிறப்புப் பற்றிய பல்வகைக் கருத்துக்களை அருளிய குருநாதர் 'நந்தனாரை ஏன் அந்தக்குடியில் இறைவன் பிறக்கச் செய்தார்? என்று ஓர் வினாவை எழுப்புகிறார்கள்.

நாம் திகைக்கிறோம்! மணிமேகலை வரலாறு, கோவலன் முற்பிறப்பு முதலிய சான்றுகளைக் காட்டி "முற்பிறப்பில் செய்த வினையின் பயனால், தகுதி வாய்ந்த அருளாளர் அக்குடியில் பிறந்திருக்கக் கூடும்" என அருளினார்கள். வினைப்பயனாலேயே அனைத்தும் நிகழும் என்பதைக் "கமலினி, அநிந்திதைமேல் மனம் போக்கிய சுந்தரர் கோட்புலியார் மக்களாகிய சிங்கடி, வனப்பகை என்பாரைக் கண்டபோது காதல் உணர்வுகொள்ள வில்லை" என்ற ஆதாரத்தைப் புராண வரலாற்றோடு கூட்டி நிறுவினார்கள்.

நந்தனார் அவதரித்த தலம் 'மேற்காநாட்டு ஆதனூர். கானாடு என்பது கால்+நாடு என்பதன் சேர்க்கை; கொள்ளிடத்தின் வடகரைப்பகுதி அது எனக்குறித்தார்கள். கானாட்டு முள்ளூர் என்ற ஊர்ப்பெயரை ஆதாரமாக்கினார்கள். ஆதனூர் என்பது ஆதமங்கலம் எனவழங்கப்படுகிறது. வைத்தீசுவரப் பெருமானுக்கு நந்தனார் பெயரால் 40 காணி நிலம் அங்கு இருந்தது என்பர்' எனக் குறிப்பு அருளி அக்காலத்தில் நாடு பிரிக்கப்பட்ட முறையையும் உணர்த்தி இடையிடையே கீழ்க் கானாடு, மேல்மழநாடு என்ற நாட்டுப் பெயர்களின் ஆட்சியையும் எடுத்துக் காட்டி விளக்கம் அளித்தார்கள்.

மேற்கா நாட்டு ஆதனூரில் அவதரித்துப் புலைப்பாடியில் வாழ்ந்த நந்தனார் பிறந்து உணர்வு தொடங்கிய நிலையிலேயே சிவபெருமானிடம் பக்தி பூண்டு விளங்கினார். இப்படி நந்தனார் பற்றிக் குறித்துக்காட்டிய குருமணிகள் உணர்வு தொடங்குதல் என்பதுபற்றி அற்புதமான விளக்கத்தை ஆதாரத்தோடு அருளினார்கள்!

இரண்டாண்டில் மெய்கண்டாரும் மூன்றாண்டில் திருஞான சம்பந்தரும் இறையருள் பெற்றனர். இதனைக்கருத்தில் கொண்டு நோக்கினால் உணர்வு தொடங்குதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டில் நிகழும் என உணரலாம். உணர்வு தொடங்கும் காலத்தே சிவஞானம் கைவரப் பெறுதலை,

" பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் "

எனக் காரைக்காலம்மையாரும் இயம்புகிறார். இவ்வாறு விளக்கமருளிய குருமணிகள் நந்தனார் தம் குலத்திற்கு ஏற்பச்செய்த தொண்டுகளையும் அருளினார்கள்! குலத்துக்கும் தொழிலுக்கும் ஏற்ற தொண்டுகளை இடைவிடாமல் செய்தமை அன்றோ நாயன்மார்களின் சிறப்பு!

வெட்டியான் தொழிலுக்காக விடப்பட்ட மானிய நிலவருமானத்தின்மூலம் சீவனம்செய்தவர்; சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களிலெல்லாம் பேரிகை மத்தளம் முதலிய வற்றுக்குத் தோலும், வாரும் அளித்தார். வீணைக்கும் யாழுக்கும் நரம்புகளை அளித்தார், பூசைக்கு ஏற்ற கோரோசனை முதலிய பொருள்களை அன்போடு கொடுத்தார்.

இப்படிச் சிவத்தொண்டுசெய்த நந்தனார் ஒருநாள் திருப்புன்கூர் சென்றார். பெருமானை நேரே கும்பிட எண்ணினார்; நந்தனார்க்கு அருள்செய்யவிரும்பிய பெருமான் இடபதேவரை ( நந்தியை ) விலகும்படி கட்டளையிட்டார். நந்தி விலகிற்று. இறைவனைப் பன்முறை துதித்து வணங்கினார். அவ்வூரில் திருக்கோயிலுக்கு அருகில் அமைந்திருந்த பள்ளமான பகுதியில் ஒரு திருக்குளத்தையும் தோண்டினார். இறையருள்பெற்ற நந்தனார் ஆதனூர் திரும்பினார்.

இவ்வரலாற்றுப் பகுதியைச் சுருக்கமாக உணர்த்திய குருமணிகள் நந்தனார் திருநாளைப்போவார் ஆனவரலாற்றையும் குறித்துக் காட்டினார்கள்.

ஆதனூரின் அருகிலுள்ள சிவதலங்கள் பலவற்றுக்கும் சென்று எல்லையில் நின்று வணங்கித் திரும்பிய நந்தனர் தில்லையில் நடனமாடும் கூத்தப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என ஒருநாள் மிகவும் விரும்பினர். அன்று இரவு முழுதும் அதே நினைவு! உறங்காமல் விழித்திருந்தார்; பொழுது விடிந்தது. தில்லை செல்ல எண்ணினர். "என் குலத்துக்கு இசைந்தது அல்ல" என்று சிந்தித்தார். முயற்சியைக் கை விட்டார்; மீண்டும் எண்ணுவார், "போவேன், நாளைக் குப் போவேன்" என்பார். 'நாளைப்போவேன்' எனப் பலகாலும் எண்ணியபடியே அவருக்கு 'நாளைப்போவார்' என்ற காரணப் பெயர் உண்டாயிற்று.

நாட்கள் பலகழிந்தன; ஒருநாள் தில்லைக்குப்புறப்பட்டார்; எல்லையை அடைந்தார். வேள்விச் சாலைகளையும், வேதம் ஓதும் இடங்களையும் பற்றி அறிந்தமையால் ஊரின் உள்ளே செல்லத் தயங்கினர். நகரைச்சுற்றிச்சுற்றி வந்தார். 'தில்லைத் திருநடனம் காணும் நாள் எந்நாளோ' என ஏங்கினர். 'இன்னல் தரும் இழிபிறவி இதுதடை' என்று எண்ணியவாறே அன்றிரவு துயில் கொண்டார். பெருமான் அன்பர் கனவில் எழுந்தருளினர். 'இப்பிறவி நீங்கத்தீயில் மூழ்கி எழுந்து நம்பால் அணைக' என்ருர். அவ்வாறே தில்லைவாழ் அந்தணர்க்கும் 'எரியமைத்துக் கொடுக்க' என அருளிச்செய்தார்.

மறுநாள் காலை; அந்தணர்கள் திருநாளைப்போவார் இருப் பிடம்நோக்கிவந்தனர்; தெற்குமதிற்புறத்தில்தீயமைத்துள்ளமை கூறி, அன்பரை அழைத்தனர். திருநாளைப்போவாரும் இறை அருளை எண்ணியவாறு 'நான் உய்ந்தேன்' எனக் கூறினர்; தீக்குழியை வலம் வந்தார்; கைகூப்பினர். பெருமான் திருவடி களை எண்ணி உட்புகுந்தார்.

அவர் மாய உடல் மறைந்தது புண்ணிய மாமுனி வடிவம் கொண்டார். தேவர்கள் மலர் பொழிந்தனர்; திருநாளைப் போவார் விரைந்து நகரில் புகுந்து தெற்குக் கோபுர வாயிலை வணங்கி, உட்புகுந்து நடனசபையின் எல்லை தலைப்பட்டார். அதன்பின் ஒருவரும் கண்டிலர்! நடராசப் பெருமானேடு ஐக்கியம் ஆனர்.

இது வரலாறு; குருமணிகள் திருநாளைப் போவாரைத் தீயிடை மூழ்கிவருமாறு இறைவன் அருளியமைக்கு இனிய விளக்கம் நல்கினர்கள்.

" தண்ணீர் புற அழுக்கை மட்டும் நீக்கும்; அக்னி அதைக் காட்டிலும் தூய்மையானது. ஹோமத்தில் திரவியங்களை இடுவதை எண்ணிப்பார்த்தால் தீயின் புனிதம் நன்கு விளங்கும்; இறைவன் தீவடிவமாகவே அமைந்துள்ளான் " என அருளினார்கள்.

நாயனார் வரலாற்றினை ஒப்பீட்டாய்வு முறையில் சிந்தித்துப் பல விளக்கங்களைத் தந்தார்கள். பிற்காலத்தில் கோபால கிருஷ்ணபாரதியார் பாடிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளையும் சேக்கிழார் அருளிய நாயனார் புராணத்தையும் ஒப்பிட்டார்கள். நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் கற்பனையோடு பல புதிய கருத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அது சாதி அடிப்படையை விரிவாகப் பல இடங்களில் சித்தரிக்கிறது என அருளிச் சில மேற்கோள்களும் காட்டினார்கள்.

நாவுக்கரசர் ' கங்கைவாழ் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே ' என அருளியதை ஒப்பிட்டுத் தத்துவ விளக்கம் அருளியமை பொருத்தமாக இருந்தது.

நாயனார் வரலாறு அருளும்போது இடையிடையே பல சமய நெறிக்கோட்பாடுகளை விளக்கிய குருநாதர், மாணிக்க வாசகர்போலவே நந்தனார் இறைவனோடு கலந்தமை, ஆண்டாள் அரங்கத்தில் திருவரங்கத்தம்மானோடு கலந்தமை, ஏகாந்தன் என்னும் சொல் ஒரே முடிவாகக் கொள்பவன் எனும் பொருள் கொண்டமைதல், சைவ சித்தாந்த சாத்திர நுட்பங்கள் – இப்படிப் பல சிந்தனைகளை வழங்கினார்கள்.

பல்வேறு பணிகட்கு இடையேயும் சிவசிந்தனை ஒரு போதும் நீங்காமல் அன்பர்களையும் ஆட்படுத்தியருளும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளின் அருளுபதேசம் மங்கல வாழ்த்துடன் நிறைந்தது.

கனிச்சாறு பருகினோம்; களிப்புடன் இல்லம் திரும்பினோம்!

வாழ்க குருமணிகள் !

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவாரப் பாடல்பெற்ற சிவதலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. அன்பர் பலரையும் இறைவழிபாட்டு நெறியில் ஈடுபடுத்திவரும் ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு இம்மாதம் 4—6—84 அன்று திருஎருக்கத்தம்புலியூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற சிறப்புடையது இத்தலம். இத்தலத்துசுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. 'திருஎருக்கத்தம் புலியூர்த் தலத்திருப் பதிகம்' என்றநூல் வெளியிடப் பெற்றது. தலத்திருப்பதிகப் பாராயணம் நடைபெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., தலச்சிறப்புக்கள் பற்றி உரையாற்றினர். அன்பர் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிறன்று காலை சரியாகப் பத்துமணிக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் ஆதீனத் திருமடத்தில் நிகழ்ந்து வருகிறது. இம்மாதம் 3—6—84 அன்று 36 ஆவது வழிபாட்டுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் திருநீறு பெற்றணிந்தபின் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுற்றது. இம்மாதம் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகத் திருக்குறிப்புத்தொண்டர் புராணம் உபதேசிக்கப்பட்டது. சேக்கிழார் சிறப்புக்களை அருளிய குருமணிகள் 'திருக்குறிப்புத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் விரிவாகச் செய்தமையைக் குறிப்பிட்டு, 'ஆகமப் பொருள் கேட்ட அம்பிகை இறைவனை முறைப்படி பூசனை புரிந்த தலம் காஞ்சிபுரம்; அத்தலத்தில் அவதரித்தவர் திருக்குறிப்புத்தொண்டர்; ஆதலால் காஞ்சியின் பெருமைகளை விரிவாகக்கூறினர்' என அருளியமை சிறந்த ஆய்வுநோக்கோடு

அமைந்திருந்தது. மேலும், 'சிவபூசை முடிந்ததாகவோ, நிறைவுற்றதாகவோ கருதவும் கூறவும் கூடாது' என்பதை விளக்கி 'ஏலவார் குழல்' எனத் தொடங்கும் தேவாரத்தைச் சான்று காட்டி விளக்கிப் பல தத்துவக்கோட்பாடுகளைப் புராணம் கொண்டு புலப்படுத்தியருளினார்கள்.

மயிலாடுதுறை நகரப் பெருமக்களும் அன்பர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 37 ஆவது அருளுபதேசம் 1—7—84 அன்று நிகழ்வுறும். அன்பர்கள் கலந்து கொண்டு பெறுவார்களாக.

## ஸ்ரீ உமாபதிதேவநாயனார் குருபூஜை

சந்தான குரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜைவிழா சித்திரை அஸ்தநாள் கூடிய 12—5—84 சனிக்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர், சந்தானாசாரியர்களுக்குக் காலை 8-30 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. தருமையாதீனத்தின் சார்பில் சிதம்பரம் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவநாயனார் திருமடத்தில் பகலில் அபிஷேக ஆராதனைகளும் மாலை 6 மணியளவில் தில்லைத் திருக்கோயிலில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு அருச்சனையும் நடைபெற்றன. தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் மாலை 6-30 மணியளவில் வித்துவான் திரு. மு. கோவிந்தராசன் 'போற்றிப்பஃறொடை' என்னும் பொருள் பற்றியும் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. 'வினா வெண்பா' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினர். அன்பர்பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## தருமையாதீனத்தில்
## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் பெருவிழா

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 11—5—84 அன்று தொடங்கிப் பெருவிழா நிகழ்வுற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக்காட்சி நிகழ்வுற்றது. திருவீதியுலாவின்போது ஆதீன வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளும் வேத பாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தினார்கள். அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

## குருபூஜைப்பெருவிழா :

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா 20-5-84 ஞாயிற்றுக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்தங்களைவழிபட்டு ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தார்கள். "கயிலைமாமுனிவர்" திருப்பனந்தாள் ஸ்ரீமத் காசிவாசிசுவாமிகள் வழிபாட்டிற்கலந்து கொண்டு திருவருட்பிரசாதம்பெற்று மகிழ்ந்தார்கள். நண்பகல் ஸ்ரீஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை ஆகியவையும் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி, வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட் பிரசாதம் வழங்கினார்கள். குருபூஜைவிழாமலராகச் 'சிவப் பிரகாசக் கட்டளை' என்னும் நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு நிறைவெய்தியபின் நண்பகல் மாகேசுவரபூஜை நிகழ்வுற்றது. குருபூஜைவிழாவில் அன்பர்கள் பலரும் கலந்துகொண்டு வழிபட்டுப்பயனுற்றனர்.

## குருமூர்த்த தரிசனம் :

குருபூஜைத் திருநாள் 20—5—84 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் மாலை 6-30 மணியளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன், திருமஞ்சனவீதியில் அமைந்திருக்கும்குருமூர்த் தங்களைத்தரிசித்து வழிபாடாற்றஎழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள் வரலாறு கூறப்பெற்றது குருமூர்த்த வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலட்சுமிதுர்க்காதேவி ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில்வழிபாடாற்றித்திரு உத் திற்த எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குக் குருபூஜைத் திருநாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடு கள் திருமெய்ஞ்ஞானநிவேதனத்துடன் நிகழ்த்தப்பெற்றன. வழி பாட்டிற்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினார்கள். "கயிலைமா முனிவர்" ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் கொலுவழிபாடு நிகழ்த்தி னார்கள். ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர்பெரு மக்களும் அன்பர்களும்தரிசித்து அருட்பிரசாதம்பெற்றுய்ந்தனர்.

## பட்டினப்பிரவேசம் :

21—5—84 ஞாயிற்றுக்கிழமை பட்டினப்பிரவேசத்திருநாள் அன்றுகாலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. காலை சிவபூஜாதுரந்தரர்கள் சிவபூசை புரிந்தகாட்சி மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. நண் பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது. இரவு கலைமாமணி திரு. A. K. C. நடராஜன் குழுவினரின் கிளாரினெட் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தில் சிவிகையில் எழுந்தருளித் திருவுலாக் காட்சி தந்தருளினார்கள். "கயிலைமாமுனிவர்" ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகளும் திருக் கூட்டத்து அடியவர்களும், அறிஞர் பெருமக்களும் அன்பர் களும் உடன்வரத் திருவுலாக்காட்சி நடைபெற்றது. திரு. A.K.C. நடராஜன் குழலிசை, பழனிசகோதரிகள் குழுவினர் முதலியோ ரின் நாதசுர இன்னிசையுடன் திருமுறை இன்னிசையும் முழங்க திருவீதியுலாக்காட்சி நிகழ்ந்தது. தருமையாதீனத் திருவீதிகளில் அன்பர்கள் பூரணகும்பங்கள் வைத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். திருவுலாக் காட்சி நிறைவெய்தியதும் கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருளி, அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

## திருநெறிய தெய்வத்தமிழ்மாநாடு :

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டி 11—5—84 முதல் 21—5—84 முடிய ஆதீனத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 7-00 மணி அளவில் மாநாடு நிகழ்வுற்றது. 11, 12, 13—5—84 ஆகிய மூன்று நாட்களும் அனைத்துலகச் சைவசித்தாந்த முதல் கருத்தரங்கம் சிறப்பான முறையில் நடைபெற்றது. கருத்தரங்கவிழா நிகழ்ச்சி கள் பற்றிய செய்திகள் இவ்விதழில் தனியே இடம்பெற்று உள்ளன. 14—5—84 முதல் பட்டிமன்றம், கவியரங்கம், வழக்காடுமன்றம், கருத்தரங்கம், வினாவிடை அரங்கம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள், வித்துவான். ஸ்ரீமத் சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான். ஸ்ரீமத். மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் மற்றும் திரு. வி. ஆறுமுகம் பிள்ளை, ஐ. ஏ. எஸ் ( ஓய்வு ) திரு சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர் பி. ஏ. பி. எல்., டாக்டர் திரு. மு. சுவாமிநாதன்எம். பி., பி எஸ்.,

செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி., பி. எல்., திரு. இரா. சிவபுண்ணியம், பி. ஏ. பி. எல்., திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ , திரு. இரா. இராமலிங்கம் எம். ஏ., ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். சித்தாந்தப் புலவர்மணி திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஒ. எல்., டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ. பி. எச்டி., திரு. அ. கலிய பெருமாள், எம். ஏ., முதுமுனைவர், மகாவித்துவான், திரு ச. தண்டபாணிதேசிகர், கவிஞர். புகழேந்தி பி. ஏ. பி. எல்., திரு. இரத்தின. பாலசுப்பிரமணியன், எம். ஏ., முதலிய அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். தருமையாதீனக் கல்விநிலைய ஆசிரியர்களும், அறிஞர்களும் அன்பர்களும் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

14—5—84 அன்று தருமபுரம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பாலர் பள்ளிக் குழந்தைகளின் கலைநிகழ்ச்சியும், 15—5—84 அன்று நகைச்சுவை மாமணி, திருச்சேறை திருமங்கைதாசன் விகட நிகழ்ச்சியும் 17—5—84 அன்று மயிலாடுதுறை ஸ்ரீ கண நாதர் பொம்மை நாடக சபையினரின் 'பக்த மார்க்கண்டேயர்' பொம்மலாட்ட நிகழ்ச்சியும், 18—5—84 அன்று தருமபுரம் செல்வன் திரு. சி. சிவசுப்பிரமணியன் குழுவினரின், ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் ' பற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் 19—5—84 அன்று மயிலாடுதுறை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரி குலேஷன் பள்ளி, அன்பகம் (செவிடு, ஊமையர் பள்ளி) மாணவ மாணவியரின் பல்சுவை நிகழ்ச்சியும் 20—5—84 அன்று தேவார இசைமணி, சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தன், தேவார சங்கீத பூஷணம், சென்னை, திரு. சா. தண்டபாணி குழுவினரின் திருமுறை இசையரங்க நிகழ்ச்சியும் 21—5—84 பட்டணப்பிரவேசத் திருநாளன்று, கலைமாமணி, திருச்சி, திரு. A. K. C, நடராசன் குழுவினரின் க்ளாரினெட் இன்னிசை நிகழ்ச்சியும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மயிலாடுதுறை நகரப்பெருமக்களும் அன்பர்களும் விழா நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் பயன்பெற்றனர்.

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இரக்தாக்ஷிஸு ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—6—1984 முதல் 15—7—1984 முடிய)

| | | | |
|---|---|---|---|
| | | சு ரா | தி பு |
| | இராசி | | |
| | | | |
| ல/ கு சந் | கே | சனி செ | |

| | | | |
|---|---|---|---|
| செ | ரா | | |
| | அம்ஸம் | | சந் |
| சனி | | | ல/ |
| | | பு தி கே | கு சு |

ஸ்ரீ இரக்தாக்ஷிஸு வைகாசிமீ 32உ குருவாரம் மூல நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 34 நாழிகை 19 விநடிக்கு தனுர் லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு ரிஷபராசியிலிருந்து மிதுனராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மறுதினம் சுக்கிரவாரம் ஆனி மாதம் முதல்தேதியாகிறது. அர்க்காதிபதி குருபகவான் ஆவார். ஸ்ரீ சூரியபகவான் ஆனிமீ 7உ குருவாரம் 35 நாழிகை 23 விநடிக்கு திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசம் செய்கின்றார். அன்றைய வாராதிபதி குருமேகாதிபதியாக இருந்து இவ்வாண்டு உலகில் மூன்று மரக்கால் மழை வருஷிக்கச்செய்வார். 10 பங்கு சமுத்திரங்களிலும் 6 பங்கு மலைகளிலும் 4 பங்கு பூமியிலும் மழை வருஷிக்கும் பயிர் விருத்தி பசுக்கள் பால் விருத்தி நன்றாக ஏற்பட்டு பிரஜைகளுக்கு சுபிட்சம் ஏற்படும். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாவது உலகில் எல்லா இடங்

களிலும் பூமிசெழிக்கும்; பயிர்விளைவு விருத்தியாகும். ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருப்பார்கள். பிராமணர்களும் மற்றவர்களும் அவரவர்களுடைய ஸ்வதர்மங்களைச் செய்ய ஆசையுள்ளவர்களாக இருப்பார்கள். தேசங்களில் எங்கும் ஆன்றோர்களால் சிவபுண்ணிய கைங்கர்யங்கள் நடந்து கொண்டிருக்கும். ஈஸ்வர கிருபையில் எல்லா மக்களும் கல்வி கலைஞானம் முறையுடன் பயின்று சிறந்து உய்வார்கள். உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரனருளினால் பரமாசாரிய சுவாமிகளாக வந்து பிரசாதம் பெழங்குகின்ற சிவஞானகுருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் உலகத்திற்கு சைவ சித்தாந்தச் செந்நெறிபரவ அனுக்கிரகித்து, உலகமக்கள் அனைவரும் சித்தாந்த உயர்நிலை எய்திப்பண்பாடு அமைய அருள்பாலிப்பார்கள். சிஷ்ய கோடிகளுக்குத் தத்துவ ஞானங்கள் போதித்து அவ்வழி கைவல்யமாக ஆசியருள் வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் ஐதீக வழியில் இனிது நடைபெறும். எல்லா பிரஜைகளும் தெய்வ பக்தியில் திரிகரண சுத்தமாக உயர்கன்மங்கள் புரிந்து வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – $\frac{1}{4}$
   ( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல தனவருமானம் வரும். பச்சை சிவப்புக் கல் பதித்த ஆபரணம் தரும். பசுபால் பிராப்தி நல்ல வாகன பிராப்தி தரும். இயந்திர சாதனங்களில் நல்ல பிரயோஜனம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 16, 17, 18, 19, 20, 24, 25, 28 ஜூலை 5, 6, 7, 8, 13, 14, 15 தேதிகளில் தனதாயம் ஜெயம், நல்விஷயங்களில் ஊக்கம் ஏற்படும். ஜூலை 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் ஏற்படும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீஷம் $\frac{1}{2}$
   ( இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். பொதுநலன்களில் ஈடுபாடு தர்மகாரியங்களை ஏற்று நடத்துதல் ஆகும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் ஏற்படும். எல்லாக் காரியங்களையும் சிறப்பாக நடத்திவரும். தாரபுத்திரர் களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூன் 19, 20, 21, 22, 23 26, 27 ஜூலை 1, 2, 7, 8, 9, 10 தேதிகளில் தனதாயம், ஜெயம் வெகுஜனபிரீதி ஏற்படும். ஜூன் 10 ஜூலை 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾
( கா. கி. - கு. க. ஙெ. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தன வரவுகளில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தி வரும். ஜூலை முதல் வித்தியா வியாபாராதிகளில் ஒப்பந்தங்களில் நற்பயன் வரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 15, 21, 22, 23, 24, 25, 28, 29, 30 ஜூலை 3, 4, 9, 10, 11, 12, 13 தேதிகளில் நல்ல தனதாயம், கௌரவம், ஜெயம் ஆகிய நற்பலன் ஏற்படும். ஜூன் 16, 17, 18 ஜூலை 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானம் வரும். கண்யஸ்திதியில் நல்ல செலவுகளையும் ஏற்படுத்தும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய மனோஜாட்டியம் நீங்கும். ஜூலை 10உ ஆனால் வாகனசுகம் நவீனவஸ்துபிராப்தி இரத்தினபூஷணாதிகள் அளிக்கும். ஜூன் 15, 16, 17, 18, 24, 25, 29, 27 ஜூலை 1, 2, 5, 6, 11, 12, 13, 14, 15 தேதிகளில் தனதாயம், நற்சம்பவம், மனோதிடம், தெய்வதரிசனம் ஆகிய நற்பலன் ஏற்படும். ஜூன் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼
( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் சுயகண்யத்திற்கு ஏற்ப, பண வருமானங்களை உண்டுபண்ணும். கௌரவஸ்திதியில் நல்விஷயங்களில் செலவும் ஆகும். அரசாங்கத் தொடர்புள்ள விஷயங்களில் நல்லன ஏற்பட்டு வரும். பொன் பொருள் வாங்குதல் ஆகும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் சயனசுகம் தரும். ஜூன் 16, 17, 18, 19, 20, 26, 27, 28, 29, 30 ஜூலை 3, 4, 7, 8, 14, 15, தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூன் 21, 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½
( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் குடும்பாபிவிருத்தியில் தனவருமானங்கள் வெகுவாக வரும்.

வித்துவத்துவம் கலைத்துறைகளில் உத்தியோகத்தில் அரசாங்க கௌரவம் பதவி உயர்வுகளை உண்டுபண்ணும். சாஸ்திர சம்பிரதாயங்கள் வைதீகத்தில் நியமமும் அவ்வழியில் மற்ற வர்களை பழக்குதலும் ஆகும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். ஜுன் 11, 20, 21, 22, 23, 28, 29, 30 ஜுலை 1, 2, 5, 6, 9, 10 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுன் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி- விசாகம் ¾
( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பா பிவிருத்தியில் தனம் பாக்கியம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் உயர் வளிக்கும். இயந்திர வாகன பிராப்தியில் புதியன வாங்குதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜுன் 15, 21, 22, 23, 24, 25, 30, ஜுலை 1, 2, 3, 4, 7, 8, 11, 12, 13 தேதி களில் தனதாயம், ஜெயம், புதிய ஒப்பந்தம், பதவி உயர்வு ஆகிய நற்பலன் ஏற்படும். ஜுன் 26, 27 தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
( தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும் குடும்பாபிவிருத்தியில் கௌரவத்திற்கு ஏற்ப பணவருமானம் வந்து நிறையும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் முன் னேற்றம் ஏற்படும். அரசாங்கத் தொடர்புள்ள விஷயங்களில் பத்திர லிகிதங்களில் நல்லன ஏற்பட்டுவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜுன் 16, 17, 18, 24, 25, 26, 27 ஜுலை 3, 4, 5, 6, 9, 10, 14, 15 தேதிகளில் தனதாயாதி நற்பலன் களையளிக்கும். ஜுன் 28, 29, 30 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
( யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும் பத்தில் நல்ல தன வரவுகள் வந்து கொண்டிருக்கும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்திபலன் ஏற்படும். ஜுலை 3உ ஆனால் எழுத்து மூல விஷயங்களில் ஜீவனோபாயம் உத்தியோகம் இவற்றில் விசேஷ நன்மைகளை உண்டுபண்ணும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜுன் 15, 19, 20,

26, 27, 28, 29 30 ஜூலை 5, 6. 7, 8 11, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூலை 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. கா. கி - )

மகர ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கணிசமாக வரவாகும். புத்திரர் பௌத்திரர்களின் நலனில் ஓரளவு பொருள் முடங்கும். வித்து வத்துவம் கலைத்துறைகளில் அரசாங்கத்தில் அனுகூலங்களை உண்டுபண்ணும். எல்லாக் காரியங்களும் குறிப்பிட்டபடி செயல்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும் ஜூன் 16, 17, 18, 21, 22, 23 28, 29, 30 ஜூலை 1, 2, 7, 8, 9, 10, 14, 15 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூலை 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம்-பூரட்டாதி ¾
( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தன வருமானங்கள் மதிப்பாக வரும். சகோதரர்களின் முன்னேற்றம், பிதா உடல்நலனில் பொருள் செலவு ஏற்படுத்தும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய ஆயாசம் நீங்கும். வித்தியாவியாபாராதிகலைத்துறைகளில் ஜூலை முதல் நற்பல பிராப்தியை உண்டுபண்ணும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்மங்களுடன் நடக்கும். ஜூன் 15, 19, 20, 24, 25, 30 ஜூலை 1, 2, 3, 4, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூலை 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
( தி. - து. ஸ ச. த. - தே. தோ. ச. சி. )

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் தனவருமானம் வரும். பிரபு நேசம் தரும். வித்து வத்துவம் கலைத்துறைகளில் அரசாங்க நன்மதிப்புதரும். எல்லா காரியங்களையும் திட சித்தமாக நடத்திவரும். ஓர் விபத்து வந்து தப்பும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜூன் 15, 16, 17, 21, 22, 23, 26, 27 ஜூலை 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூலை 7, 8, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.